இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்

குறிப்பேடு

மலர் - 27 இதழ் 9 - 10 2008 செப்தெம்பர்-ஒக்றோபர்

2007 ஆண்டறிக்கையிலிருந்து



இலங்கை மத்திய [illegible] பொருளாதார இருமாத சஞ்சிகை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

2007 ஆண்டறிக்கை

நாணய விதிச் சட்டத்தின் 35 வது வாசகத்தின் (422 வது அத்தியாயம்) ஏற்பாடுகளின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது பொருளாதார நிலைமை, இலங்கை மத்திய வங்கியின் நிலைமை மற்றும் நாணயச் சபை கடைப்பிடித்த கொள்கைகள் மற்றும் வழிமுறைகள் பற்றிய விவரம் உள்ளடங்கிய ஒரு ஆண்டறிக்கையை அந்தந்த நிதி ஆண்டு முடிவடைந்து நான்கு மாதத்தினுள் நிதி அமைச்சருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்படி சட்டத் தேவையினை நிறைவேற்றுகின்ற வகையில், 2007 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் 58 வது அறிக்கை 2008 மார்ச் மாதம் 31 ஆம் திகதி கௌரவ நிதி, திட்டமிடல் அமைச்சர் மாண்புமிகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடம் கையளிக்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டுக்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை நான்கு பகுதிகளையும் ஒரு புள்ளிவிபரப் பின்னிணைப்பையும், சிறப்புப் புள்ளிவிபரப் பின்னிணைப்பையும் உள்ளடக்கியுள்ளது. அறிக்கையின் முதலாவது பகுதியின் மூலம் இலங்கையின் பொருளாதார நிலைமை விவரிக்கப்படுகின்றது. இரண்டாவது பகுதி இலங்கை மத்திய வங்கியின் கணக்குகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பானதாகும். மூன்றாவது பகுதியின் மூலம் நாணயச் சபை 2007 ஆம் ஆண்டில் பயன்படுத்திய முக்கியமான நிருவாக வழிமுறைகள் காட்டப்பட்டுள்ளன. மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித் தொழில் நிறுவனங்களினதும் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளுடன் தொடர்புடையதாக 2007 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட முக்கியமான சட்டவாக்கங்கள் நான்காவது பகுதியில் உள்ளடங்கியுள்ளன. (தொடர்ச்சி 3வது பக்கம்......).

குறிப்பேடு

ISSN 1391-7676

2008 செப்தெம்பர்/ஒக்றோபர்

ஒரு பிரதியின் விலை : ரூபா 10.00
வருடாந்த சந்தா : ரூபா 240.00
(தபாற் கட்டணத்துடன்)

தொடர்பூட்டல் பணிப்பாளர், இலங்கை மத்திய வங்கி எனக் குறிப்பிடப்பட்ட காசுக்கட்டளைகள்/ காசோலைகள் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் "குறிப்பேடு" சஞ்சிகையை மாதாந்தம் அஞ்சலில் பெற்றுக்கொள்ளலாம்.

பணிப்பாளர்,
தொடர்பூட்டல் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
த.பெ.இல. 590, கொழும்பு.

கட்டுரைகள்	பக்கம்
பேரண்டப் பொருளாதாரப் பிரச்சினைகள், கொள்கைகள் மற்றும் தீர்வுகள்	3
உண்மைத் துறை	10
நாணயம் மற்றும் நிதியியல் துறை	13
வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்	18
அரசின் இறைக் கொள்கையும் அரச நிதியியல் தொழிற்பாடுகளும்	25

"குறிப்பேடு" சஞ்சிகையில் இடம்பெறும் கருத்துக்கள் கட்டுரை ஆசிரியரின் கருத்துக்களேயொழிய இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாகாதிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரண்டப் பொருளாதாரப் பிரச்சினைகள், கொள்கைகள் மற்றும் தீர்வுகள்

அனில் பெரேரா
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

அறிமுகம்

பேரண்டப் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் தொடர்பில் ஆராய்கின்றபோது இலங்கை ஒருசில வெற்றிகளையும் உயர் செயலாற்றுகை மட்டத்தினையும் அடைந்துள்ளதென்பது தெளிவாகின்றது. இலங்கை முகம்கொடுத்துள்ள சவால்களும் உரித்தாயுள்ள வளங்கள் மற்றும் வெளிநாட்டு வளங்கள் தொடர்பில் அடையப்பெற்றுள்ள வெற்றிகளும் செயலாற்றுகையும் திருப்திகரமான மட்டத்தில் உள்ளன. குறிப்பாக ஆசிய பிராந்தியத்தின் ஏனைய நாடுகளோடு ஒப்பிடுகின்றபோது இலங்கையின் உயர்ந்தளவிலான தனி ஆளுக்குரிய உற்பத்தியும், பிரதேச அபிவிருத்தியின் ஊடாக வறுமை வீழ்ச்சியடைகின்ற போக்கும் அதேபோன்று உயர் மனித அபிவிருத்தி மட்டமும் திருப்தியடையக்கூடிய விடயங்களாக உள்ளன. எவ்வாறாயினும், உலகின் அபிவிருத்தியடைந்த நாடுகள் மற்றும் ஒருசில அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கை அடையப்பெற வேண்டிய செயலாற்றுகை மட்டமும் அதேபோன்று சிறந்த முறையில் நெறிப்படுத்தப்பட வேண்டிய பேரண்டப் பொருளாதார மாறிலிகளும் அநேகம் உள்ளன. குறைந்த பணவீக்கம் - உயர் வளர்ச்சிப் பாதையில் பிரவேசிப்பதன் ஊடாக வளர்ச்சியின் நன்மைகளை அனைவரும் அனுபவிப்பதற்கும் - அபிவிருத்தியின் ஊடாக உயர் வாழ்க்கைத் தரத்தினை அடைந்துகொள்வதற்கும் இது அத்தியாவசியமான விடயமாக உள்ளது.

2007 இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையைத் தழுவியதாக, இக்கட்டுரையின் மூலம்இலங்கையின் தற்போதைய பேரண்டப் பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய கொள்கைகள் மற்றும் தீர்வுகள் சுருக்கமாக ஆரயப்படுகின்றன.

(தொடர்ச்சி 3வது பக்கம்......)

ஆண்டறிக்கையின் முதலாவது பகுதி இலங்கையின் பொருளாதார நிமையைப் பற்றி விளக்கமான விடயங்களைக் கொண்ட எட்டு அத்தியாயங்களை உள்ளடக்கியுள்ளது. அவை முறையே பின்வருமாறு.

1. பொருளாதாரம், விலைகள் மற்றும் நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்
2. தேசிய உற்பத்தியும் செலவினமும்
3. பொருளாதார, சமூக உட்கட்டமைப்பு
4. விலைகள், கூலிகள் மற்றும் தொழில் நிலை
5. வெளிநாட்டுத்துறை அபிவிருத்தி மற்றும் கொள்கைகள்
6. இறைக் கொள்கையும் அரச நிதியும்
7. நாணயக் கொள்கை, பணம், கொடுகடன் மற்றும் வட்டி வீதங்கள்
8. நிதியியல் துறை அபிவிருத்திகளும் நிதியியல் முறைமை உறுதித் தன்மையும்

மேற்படி எட்டு அத்தியாயங்களிலும் விளக்கமாகவும், விரிவாகவும் கலந்துரையாடப்படுகின்ற விடயங்களில் முக்கியமான ஒருசில விடயங்கள், கல்விபெறுவோரின் பயன்பாட்டுக்காக சுருக்கமாக இத்தடவை குறிப்பேட்டில் வெளியிடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதாரக் கொள்கையும் பெறுபேறுகளும்

முழுமையாக இந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்குத் தேவையான சூழல் உருவாவதற்கெனில், நடுத்தரகால ரீதியில் பொருளாதாரம் 8 சதவீதத்தையும் விட அதிக வேகத்தில் வளர்ச்சியடைதல் வேண்டும். தனியே ஓரிரு வருடங்களில் மட்டுமன்றி அவ்வாறான வளர்ச்சியை தொடர்ச்சியாக நீண்ட காலத்திற்குப் பேணிவருதல் அத்தியாவசியமாகும். பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து பேணிவராது அபிவிருத்தி மட்டத்தை அடைய முடியாது என்பது, அபிவிருத்தி முறைகளை ஆராய்கின்ற போது காணக்கூடியதாயுள்ள ஒரு முக்கியமான விடயமாகும். சிங்கப்பூர், தென்கொரியா, தாய்வான், ஹொங்கொங் ஆகிய அபிவிருத்தியடைந்த தென்கிழக்காசிய நாடுகளைப் பொறுத்தவரை இது மிகத் தெளிவாயுள்ளது. ஏனைய அபிவிருத்தியடைந்த கைத்தொழில் நாடுகளின் அனுபவத்தையும் சிறந்த உதாரணங்களாகப் பெற்றுக்கொள்ளலாம். சீனா, இந்தியா ஆகிய நாடுகளிலும் தொடர்ச்சியான உயர் பொருளாதார வளர்ச்சியின் ஊடாக அந்நாடுகளில் பௌதீக மற்றும் மனித அபிவிருத்தி துரிதமாக நடைபெற்று வருவதனை அவதானிக்கலாம்.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் சராசரி 4.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளது. குறிப்பாக, தற்கால பொருளாதார வரலாற்றினுள் 1978 மற்றும் 2006 ஆகிய இரண்டு வருடங்களில் மட்டுமே 7 சதவீதத்தைத் தாண்டிய விதத்தில் பொருளாதாரம் வளர்ச்சியடைந்துள்ளது. இதற்கிணங்க, ஒருசில தென்கிழக்காசிய நாடுகளில் 1970 இன் பின்னர் அறிக்கையிடப்பட்ட பொருளாதார வளர்ச்சியையும், இன்று இந்தியா மற்றும் சீனா ஆகிய பிராந்திய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியையும் ஒப்பிடுகின்றபோது இலங்கை நடுத்தரப் பொருளாதார வளர்ச்சியையே அறிக்கையிட்டுள்ளது எனக் கூறலாம்.

சுதந்திரத்தின் பின்னர் கிட்டத்தட்ட இரண்டு தசாப்தங்கள் செல்லும் வரை இந்நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள், முக்கியமாக சமூக நலனோம்புகை நிகழ்ச்சித் திட்டங்களையும் தனியார் துறை தொழில்முயற்சிகளை மக்கள்மயமாக்குதலையும் அடிப்படையாகக் கொண்ட விரிவான அரச தலையீட்டின் பொருட்டே ஆற்றுப்படுத்தப்பட்டன. பொருளாதாரக் கொள்கைகளைத் தளர்த்துதல் தொடர்பான முதலாவது கட்டம் 1965-70 கால கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட போதிலும், விரிவான பொருளாதாரத் தாராளமயமாக்கல் நிகழ்ச்சித் திட்டமும் சீர்திருத்தமும் 1977 இன் பின்னரே அறிமுகப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் போக்கினை ஆராய்கின்றபோது, அரச துறையின் உயர் தலையீட்டுடன் கூடிய காலகட்டங்களை விட பொருளாதாரத் தாராளமயமாக்கலுடன் கூடிய காலகட்டங்களில் ஒப்பீட்டளவில் உயர் பொருளாதார வளர்ச்சியைக் காணக்கூடியதாக இருந்ததென்பது தெளிவாகின்றது.

1 வது அட்டவணை

தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிய நாடுகளில் தனி ஆளுக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஐ.அ.டொலர்)

நாடு	1960	1970	1980	1990	1995	2005
ஐக்கிய அமெரிக்கா	2,551	3,177	7,787	14,387	22,346	26,600
ஐக்கிய இராச்சியம்	1,366	2,214	9,549	17,477	24,626	33,238
சிங்கப்பூர்	427	904	4,859	12,091	23,019	35,163
கொரியா	155	282	1,664	6,145	10,878	20,022
மலேசியா	236	370	1,787	2,432	3,991	9,812
இந்தியா	80	105	249	355	428	922
பங்களாதேஷ்	-	-	175	269	341	428
இலங்கை	142	183	273	473	899	1,617

மூலம்: பன்னாட்டு நாணய நிதியம்

மேலும், இலங்கைப் பொருளாதாரத்தின் தற்போதைய உள்ளமைப்பை ஆராய்கின்றபோது, பொருளாதாரத் தாராளமயமாக்கலைத் தொடர்ந்து பொருளாதாரம் உள்ளமைப்பு ரீதியிலான மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளதனைக் காணக்கூடியதாயுள்ளது. ஆதலால், தற்போது இலங்கையின் பொருளாதாரம் முன்பை விட பாதகமான வெளிவாரி அதிர்ச்சிகளுக்குத் தாக்குப்பிடிக்கக்கூடிய பலத்தைப் பெற்றுள்ளது. பொருளாதாரச் செயற்பாடுகள் பெருமளவு வேளாண்மைத் துறையில் தங்கியிருத்தல் குறைவடைந்துள்ளதோடு, அதற்கு ஒப்பீட்டளவில் தொழில் மற்றும் வருமானம் ஈட்டக்கூடிய வாய்ப்புகள் அதிகரித்து கைத்தொழில் மற்றும் பணிகள் துறை பொருளாதாரத்தின் முதன்மைத் துறைகளாக மாறியுள்ளன. இரண்டாவதாக, பொருளாதார தாராளமயப்படுத்தலின் நன்மைகள் என்ற வகையில், வெளிநாட்டு வர்த்தகத் துறை விரிவடைந்துள்ளதோடு, பொருளாதாரச் செயற்பாட்டிற்கு இதன் மூலம் உயர் பங்களிப்பு வழங்கப்படுகின்றது.

2 வது அட்டவணை

இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளும் பொருளாதார வளர்ச்சியும்

கால கட்டம்	அடிப்படைப் பொருளாதாரக் கொள்கையின் பண்புகள்	சராசரி பொருளாதார வளர்ச்சி (%)
1951-55	தாராளமயம்	4.3
1956-59	உயர் அரச தலையீடு	1.6
1960-64	உயர் அரச தலையீடு	4.5
1965-69	வரையறுக்கப்பட்ட தாராளமயம்	4.9
1970-77	உயர் அரச தலையீடு	3.1
1978-2007	தாராளமயம்	5.0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தினதும் பெறுபேறாக, பொருளாதாரம் பல்வேறு தடைகள் மற்றும் பாதகமான காரணிகளுக்கு மத்தியில்கூட தொடர்ச்சியாக வளர்ச்சிப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. அதேபோன்று வளர்ச்சியின் நன்மைகளையும் உருவாக்குகின்றது. 1948 இல் ஐ.அ.டொலர் 120 என மதிப்பிடப்பட்டிருந்த இந்நாட்டின் தனி ஆளுக்குரிய வருமானம் 2007 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1617 வரை வளர்ச்சியடைந்துள்ளது. 1948 இல் 11.9 சதவீதமாக இருந்த தொழிலின்மை வீதம் 1973 இன் ஆரம்பப் பகுதியில் 24 சதவீத உயர் மட்டத்தை அடைந்து 1990 இன் மத்திய பகுதியாகின்றபோது 15.9 சதவீதமாகப் பதியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 1997 இல் 10.2 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்த தொழிலின்மை வீதம் 2007 இன் இறுதியாகின்றபோது 6 சதவீத சாதனை மட்டம் வரை வீழ்ச்சியடைந்துள்ளது. உண்மை வருமானம் மற்றும் தொழில் வாய்ப்புகள் வளர்ச்சியடைந்தமைக்கு மேலதிகமாக அபிவிருத்தியின் பல்வேறு துறைகளின் மூலம் இலங்கை முன்னேற்றத்தை அடைந்துள்ளது. இத்துறைகளில் சுகாதாரம், கல்வி, வீடமைப்பு, சுத்தமான நீர், மின்சாரம் மற்றும் தொடர்பூட்டல் சேவைகளும் உள்ளடங்குகின்றன.

அதேபோன்று, மனித அபிவிருத்தியைப் பொறுத்தவரை இலங்கையானது பிராந்தியத்தில் பெரும்பாலான நாடுகளைத் தாண்டிச் சென்று உயர் மட்டத்தில் உள்ளதோடு, இது ஒருசில அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களுடன் கூடிய நாடுகளின் மனித அபிவிருத்தி மட்டத்திற்குச் சமமானதாக உள்ளதென்பதைக் காணலாம்.

வளர்ச்சியின் நலன்களை பொருளாதாரத்தின் பல்வேறான தரப்பினர்களிடையே பகிர்ந்தளித்து முழுமையாக மக்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு தொடர்ச்சியானதும் நீடித்து நிலைத்திருக்கத்தக்கதுமான வளர்ச்சியைப் பேணிவருதல் அத்தியாவசியமான விடயமாக உள்ளது. பொருளாதாரத்தின் பலங்களையும், அதேபோன்று பொருளாதாரத்தைப் பாதிக்கின்ற பலவீனங்களையும், அத்தகைய பலவீனங்களுக்கு ஏதுவாயமைகின்ற காரணிகளையும், சவால்கள் மற்றும் பலவீனங்களை வெற்றிகொள்ளக்கூடிய தீர்வுகளையும், கொள்கை வழிகாட்டல்களையும் அமைத்துக்கொள்ளுதல் இங்கு அத்தியாவசியமாகின்றது. தற்போதைய பொருளாதார வளர்ச்சிப் போக்குகள் மற்றும் எதிர்காலச் சவால்களுடன் தொடர்புடையதான ஒரு பகுப்பாய்வு 2006 இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கையைத் தழுவியதாக கடந்த குறிப்பேடு இதழொன்றின் மூலம் வெளியிடப்பட்டது. இக் கொள்கைகள் மற்றும் பொருளாதாரத்தின் முன்னிலையிலுள்ள சவால்களுடன் தொடர்புடைய தீர்வுகள் பற்றிய மேலுமொரு பகுப்பாய்வினை 2007 ஆண்டறிக்கையைத் தழுவியதாக வழங்கக்கூடியதாக உள்ளது.

நடுத்தரகால ரீதியில் 8 சதவீதத்திற்கும் அதிகமான நிலைத்திருக்கத்தக்க பொருளாதார வளர்ச்சி வேகத்தைப் பேணிவருவதற்குத் தேவையான முன்நிபந்தனைகளும் தொடர்புடைய கட்டமைப்பு ரீதியான கொள்கைகளும் பிரதானமான பல துறைகளின் ஊடாக இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது. இத்துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு, உற்பத்தித்திறன் வளர்ச்சி, அரசிறைத் தொழிற்பாடுகளைச் சிறந்த முறையில் நெறிப்படுத்தல், பணவீக்க கட்டுப்பாடு மற்றும் வலுசக்திப் பாதுகாப்பு ஆகியன முக்கியமானவையாகும்.

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல்

வளர்ச்சிச் செயற்பாட்டினை தொடர்ச்சியானதாகவும் உயர் மட்டத்திலும் வைத்திருக்கும் பொருட்டு பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகளை சிறந்த நிலையில் பேணிவருதல் அத்தியாவசியமாகும். உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தலும், அதற்கு உதவியாக இருக்கக்கூடிய ஏனைய பணிகளில் உள்ள குறைபாடுகள் மற்றும் வரையறைகள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணுதலும், வளங்களை மிக வினைத்திறன்மிக்க விதத்தில் பயன்படுத்தக்கூடியவாறு உற்பத்தித்திறனை அதிகளவில் வளர்ப்பதன் மூலம் உற்பத்திக் கொள்ளளவை விரிவாக்குதலும் அவசியமாகும். இதன் பொருட்டு போட்டி ரீதியில் விலையிடப்பட்ட தொடர்ச்சியான வலுசக்தி வழங்கல், தொடர்பூட்டல் சேவைகள், குடிநீர் மற்றும் நீர்ப்பாசன நீர் வழங்கல், பெருந் தெருக்கள், துறைமுகம் மற்றும் விமான நிலையம் மட்டுமன்றி சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகளையும் மேம்படுத்துவதற்கு பாரிய அளவிலான முதலீடுகள் அவசியமாகின்றன.

விரிவான விதத்தில் உத்தேச பௌதீக உட்கட்டமைப்பு வசதிகளை துரிதமாக அமுலாக்குதலும், அடையாளம் காணப்படுகின்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் அபிவிருத்தி செய்தலும், உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குகின்ற நிறுவனங்களின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துதலும் கட்டாயமான தேவைகளாக உள்ளன. அதேபோன்று செலவினம் அதிகரிப்பதன் தாக்கத்தினைக் குறைக்கும் பொருட்டும், நடுத்தரகால நிலைத்திருக்கத்தக்க உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் குறித்த கருத்திட்டங்களை மிகத் துரிதமாகச் செயற்படுத்துதல் வேண்டும்.

அரச - தனியார் துறை கூட்டுமுயற்சியை ஊக்குவித்தல்

உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்கின்றபோது அரச-தனியார் துறை ஒத்துழைப்பை மேம்படுத்துதல் காலத்தின் தேவையாக உள்ளது.

சந்தைப் பொருளாதாரத்திலும் அபிவிருத்தியடைந்துவரும் பொருளாதாரத்திலும் உட்கட்டமைப்பு வசதி தொடர்பிலான நிதியங்களைப் பெற்றுக்கொள்கின்ற போது அரச-தனியார் துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுமுயற்சி (Public-Private Partnership/PPP) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல் முறையாக மாறிவருகின்றது. அரசாங்கமானது காணி, உரிமப் பத்திரம், பாதுகாப்பு, அரச உத்தரவாதம் ஆகியவற்றை வழங்குவதன் ஊடாக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து தனியார் துறைக்கு கருத்திட்டங்களுக்கான நிதியத்தை வழங்குதலும், கருத்திட்டங்களைச் செயற்படுத்தவும் நெறிப்படுத்தவும் முடியுமான சுற்றாடலை உருவாக்குதலும் அவசியமாகின்றது. அதேநேரம் போட்டி ரீதியிலான விலைக் கேள்வி முறையின் மூலம் தனியார் துறையின் பங்குபற்றுனர்களைத் தெரிவு செய்வதாயிருப்பின் மற்றும் தனியுரிமை அல்லது பலருரிமைப் போட்டியின் மூலம் உருவாகக் கூடிய அநீதியான வர்த்தகப் பழக்கங்களை தவிர்ப்பதற்கு உரிய விதத்திலான ஒழுங்குமுறையாக்கல்கள் நடைபெறுமெனில், அரச-தனியார் துறை கூட்டுமுயற்சியின் ஊடாக மிகவும் வினைத்திறன்மிக்க உட்கட்டமைப்புச் சேவைகளை வழங்குவதற்கு இயலுமாயிருக்கும். அரச-தனியார் துறை கூட்டுமுயற்சியின் மூலம் அரச துறை மீதிலான அனாவசியமான அழுத்தத்தைக் குறைக்கலாம் என்பதோடு, அரச படுகடனைத் தாங்கக்கூடிய மட்டம் வரை வீழ்சியடையச் செய்யவும் இயலுமாயிருக்கும்.

உற்பத்தித்திறன் வளர்ச்சி

உற்பத்தித் திறனையும் போட்டி நிலையையும் மேம்படுத்துதல் பொருளாதாரத்தில் பணிகள், கைத்தொழில் மற்றும் வேளாண்மை ஆகிய அனைத்துத் துறைகளினதும் வளர்ச்சியின் பொருட்டு அவசியமான முன்நிபந்தனைகளாக உள்ளன. குறிப்பாக உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் ஊடாக போட்டி நிலை உயர்வடையும் என்பதோடு, இது உற்பத்தியாளர், நுகர்வோர் ஆகிய இரு தரப்பினர்களினதும் நலனோம்புகைக்குக் காரணமாயமைகின்றது. உற்பத்தித்திறன் முக்கியமாயிருப்பது தனியே பொருளாதார வளர்ச்சி நிலையின் நிலைத்திருக்கத்தக்க தன்மையை உறுதி செய்வதற்கு மட்டுமல்ல. குறிப்பாக பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பல்வேறு தரப்பினர்கள் மீதும் தாக்கங்களை ஏற்படுத்தாதவாறு விலை உறுதிப்பாட்டைப் பேணிவருவதிலும், அதாவது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும் உற்பத்தித் திறன் மிக முக்கியமானதாக உள்ளது.

தற்போதைய உலக மற்றும் உள்நாட்டு நிலைமைகளைப் பொறுத்தவரை கமத்தொழில் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் அத்தியாவசியமான விடயமாக மேலெழுகின்றது. போட்டி நிலையையும் உற்பத்தித் திறனையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட கொள்கைளின் ஊடாக நிலைத்திருக்கத்தக்க கமத்தொழில் வளர்ச்சியினை அடையப்பெறலாம். இங்கு ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்நுட்பத்தின் ஊடாக இயற்கை வளங்களைச் சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்தல், கேள்வியின் அடிப்படையிலான விஸ்தரிப்புச் சேவைகளை ஊக்குவித்தல், அறுவடைக்குப் பிந்திய விரயத்தைக் குறைத்தல், நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்தல், பீடைகள் முகாமைத்துவம் மற்றும் கமத்தொழில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் ஆகியன அத்தியாவசியமாகும்.

குறிப்பாக, வேளாண்மைத் துறையில் தொழில் நிலை குறைந்துவருகின்ற நிலைமையினுள் இத் துறையிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற வளர்ச்சி இலக்கினை அடைவதற்கும், அதேபோன்று மிகவும் சமநிலையான பிரதேச வளர்ச்சியினை உருவாக்கிக் கொள்வதற்குமான முன்தேவைப்பாடாக வேளாண்மைத் துறையின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதலைக் குறிப்பிடலாம். அதேநேரம் தொழிலின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதலும் அத்தியாவசியமான காரணியாக விளங்குகின்றது. தொழிலின்மை ஆகக் குறைந்த மட்டம் வரை வீழ்ச்சியடைந்துள்ள போக்கானது, மிகவும் வினைத்திறன்மிக்க விதத்தில் அத்தகைய ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்த வேண்டிய அவசியத்தையும், தொழிலுக்கான கேள்விக்கும் நிரம்பலுக்கும் இடையிலுள்ள முரண்பாட்டை குறைப்பதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டிய அவசியத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. இந்நாட்டின் தொழிலின் நிரம்பலிலும் தொழிலின் கேள்வியிலும் உள்ள சமமின்மையை சுட்டிக்காட்டுகின்ற விடயங்களிடையே, உயர் மட்டத்திலான இளைஞர் தொழிலின்மை மற்றும் பட்டதாரிகளின் தொழிலின்மையும், இவர்கள் ஏற்கனவே விரிவடைந்துள்ள அரச துறையில் சேர்வதற்கான விருப்பமும், தனியார் துறைக்குத் தேவையான தகுதிவாய்ந்த திறமையான ஊழியர்களைத் தேடிக்கொள்வதிலுள்ள கஷ்டமும் முக்கியமானவைகளாக உள்ளன.

எழுத்தறிவு, முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலைக் கல்வி ஆகியவற்றைப் பொறுத்தவரை இந்நாட்டின் கல்வி வளர்ச்சியடைந்த மட்டத்தில் இருந்த போதிலும், இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி, குறிப்பாக பல்கலைக் கழக கல்வி சமமான பிராந்திய நாடுகளின் நிலைமையை விட கீழ் மட்டத்தில் உள்ளது. இலங்கையில் பல்கலைக் கழக அனுமதியின் பொருட்டு வரையறுக்கப்பட்ட ஒரு தொகையினரே தகுதி பெறுகின்றனர் என்பதோடு, அவர்கள்கூட, நிரம்பலின் மீது தங்கியிருக்கின்ற பல்கலைக் கழக கல்வி முறைக்கு முகம்கொடுக்க நேரிடுவதால், தொழிற் சந்தைத் தேவைகளுக்கும் தொழில்முயற்சிக் கலாசாரத்திற்கும் இதன் மூலம் சிறியதொரு உதவியே கிடைக்கின்றது. இதன் மூலம் தொழிலின் நிரம்பல் மற்றும் தொழிலின் கேள்விக்கு இடையே பொருந்தாத் தன்மையொன்று உருவாகின்றது. பல்கலைக் கழக அனுமதியைப் பெறுகின்ற மாணவர்களில் சராசரியாக 65 சதவீதமானோர் சமூக மற்றும் மானிடவியல் பாடங்களைக் கற்பதன் காரணத்தினால் இவர்களில் குறிப்பிடத்தக்க தொகையினருக்கு தொழில் பெறுவது கஷ்டமாக இருக்கும். நிதி மற்றும் ஏனைய வளங்களின் பற்றாக்குறையும் அரசாங்க பல்கலைக் கழக முறையின் முன்னேற்றத்தை கட்டுப்படுத்துவதோடு, அதன் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துறையில் மாற்று நிதியிடல் முறைகளை உருவாக்குவதன் முக்கியத்துவம் சுட்டிக்காட்டப்படுகிறது. ஆதலால், அனைவருக்கும் மிகவும் பொருத்தமான உயர் கல்வியினை வழங்குவதற்கும், தொழில் நிரம்பலினதும் கேள்வியினதும் பொருந்தாத் தன்மை தொடர்பிலான பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இயலுமான வகையில் உயர் கல்விக்கு சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல் அத்தியாவசியமான விடயமாக உள்ளது.

மேலும், ஏற்றுமதிப் போட்டி நிலையை மேம்படுத்துவதில் உற்பத்தித்திறன் அத்தியாவசியமானதொரு விடயமாக உள்ளது. மிதக்கும் செலாவணி வீத முறையின் கீழ், இலங்கை ரூபாவை பிரதானமான நாணய வகைகளுக்கு எதிராக தொடர்ந்து பெருமளவு தேய்வுக்குள்ளாகின்ற ஒரு நாணயமாக இனிமேலும் கருத முடியாது. உள்நாட்டின் வெளிநாட்டு நாணயச் சந்தை முதிர்ச்சியடைந்தமையைத் தொடர்ந்து செலாவணி வீதமானது கேள்வி மற்றும் நிரம்பல் ஆகிய சந்தைச் சக்திகளுக்கு பிரதிபலிப்புக் காட்டுகின்ற வகையில் தீர்மானிக்கப்படுகிறது. அதேநேரம், சந்தையினுள் அதிகளவான தளம்பலைக் குறைப்பதற்கும், அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளை அதிகரிக்கச் செய்வதற்கும் மட்டுமே இலங்கை மத்திய வங்கி மட்டுப்பட்ட விதத்தில் தலையிடுகின்றது. எவ்வாறாயினும், இலங்கை ரூபாவின் அண்மையில் நடைபெற்ற உறுதித் தன்மையின் மூலம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிப் போட்டித் துறைகளில் வெளிநாட்டுப் போட்டி நிலையைப் பேணிவரும் பொருட்டு உற்பத்தித் திறனை வளர்ப்பதில் அதிக கவனத்தைச் செலுத்துகின்ற தேவையும் சந்தைப் பிரவேசத்தினை வளர்ப்பதன் தேவையும் எடுத்துக்காட்டப்படுகின்றது.

அரச நிதியியல் ஒருமைப்பாட்டை தொடர்ந்து பேணிவருதல்

அரச நிதித் துறையில் நிலவுகின்ற பிரதானமான ஒருசில பின்னடைவுகளின் காணரமாக இத்துறை தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது. அரசிறை குறைவடைந்துள்ளமை மற்றும் மீண்டுவரும் செலவினம் அதிகரித்துள்ளமையின் ஊடாக உருவாகின்ற மேலதிக நிதித் தேவையின் காரணமாக படுகடன் தொகையும் எதிர்கால வட்டிச் செலவினமும் அதிகரிக்கின்றமை பிரச்சினைக்குரியதொரு நிலைமையாக உள்ளது. இதற்கிணங்க, அரசிறை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விடக் குறைவடைந்துள்ளமையைக் கவனத்திற் கொண்டு அத்தகைய இடர்நேர்வுகளை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியமாகும். இன்றேல் அரசிறை இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ளுதல் ஒரு சவாலாக அமையலாம். மீண்டுவரும் செலவினத்தின் இலக்கிடப்பட்ட தொகை அதிகரித்துள்ளமையின் காரணமாக அரச முதலீடுகளின் பொருட்டு அரசிறையிலிருந்து இடப்படுகின்ற தொகை அவசியமான மற்றும் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விடக் குறைவடையும் என்பதோடு, இது நாட்டின் நீண்டகால பொருளாதார சுபீட்சத்தை ஈட்டிக்கொள்வதற்குத் தடையாக இருக்கும். இப் பணத்தொகையை மூலதனச் செலவாக, அதாவது முதலீடாகப் பிரயோகித்திருப்பின் பொருளாதாரத்திற்கு பெறமுடியுமாயிருந்த நன்மைகளைக் கவனத்திற்கொள்கின்ற போது, அதிகளவிலான மீண்டுவரும் செலவினத்தின் காரணமாக உருவாகின்ற தருவாய்ச் செலவினம் மிக அதிகமாக உள்ளது.

அதேநேரம், அரச துறைக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படாத வகையில், அரச தொழில் முயற்சிகளைக் கொண்டு மிக வினைத்திறன்மிக்க விதத்தில் சேவைகளை வழங்குதல், பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டிற்கான முன்தேவைப்பாடாக உள்ளது. மின்சாரம், நீர், போக்குவரத்துச் சேவை, பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் அரசாங்கத்துக்குச் சொந்தமான சந்தைப்படுத்தல் வலையமைப்பைக் கொண்டு சந்தைப்படுத்தப்படுகின்ற சேவைகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் அத்தியாவசிய பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய சேவைகளை அரச தொழில்முயற்சிகளின் ஊடாக மேற்கொள்ளுதல் பிரதானமான பேரண்டப் பொருளாதாரச் சமமின்மைகள் உருவாவதற்குக் காரணமாக அமைந்துள்ளன. இதன்படி, அரச தொழில் முயற்சிகள் பொதுமக்களுக்கு மேலும் பாதிப்புகள் ஏற்படாதவாறு, தனியார் துறையைவிட போட்டி ரீதியிலானதும், வினைத்திறனுடன் கூடியதாகவும் பொதுமக்களுக்குச் சேவை வழங்குவதை மேற்கொள்ளல் வேண்டும். ஆதலால், அரச மானியங்களை எதிர்பார்க்காது, வர்த்தக சாத்தியத் தன்மையுடன் கூடியதாக தொழிற்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்ற குறிக்கோள்களை ஈட்டிக்கொள்வதை உறுதி செய்வதற்கெனில், அரச தொழில் முயற்சிகளின் பொருட்டு சிறந்ததொரு நல்லாட்சியையும் விலையிடல் கட்டமைப்பொன்றையும் தாபித்தல் அத்தியாவசியமாகின்றது.

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்

சர்வதேச சந்தையில் வர்த்தகப் பண்டங்களின் விலைகள் துரிதமாக அதிகரித்தமையின் காரணமாக உயர் பணவீக்கத்தினை தனியொரு இலக்கத்தின் மட்டத்திற்குக் கொண்டு வருதல் மிகவும் சவால்மிக்கதொரு பணியாக இருந்தது. இலங்கை மத்திய வங்கி 2008 மற்றும் அதற்கு பின்னரான நிதியியல் துறை கொள்கை வழிகாட்டியின் மூலம் அறிவித்துள்ளவாறு, பணவீக்கத்தை வீழ்ச்சியடையச் செய்வதற்கான உபாய வழிமுறைகளை முன்வைத்துள்ளது. எவ்வாறாயினும், உலக பொருளாதாரத்தின் பல்வேறான வளர்ச்சிகரமான நிலைமைகள், அதாவது, குறிப்பாக எண்ணெய் மற்றும் அத்தியாவசிய வர்த்தகப் பண்டங்களின் சர்வதேச சந்தை விலைகளில் உருவாகின்ற மாற்றங்கள் இவ்விலக்கினை நிறைவேற்றிக்கொள்வது தொடர்பில் முக்கியமாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஒருசில உணவுப் பயிர்கள் உயிர் எரிபொருளின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுதல் மற்றும் சீரற்ற காலநிலையினால் வர்த்தகப் பண்டங்களின் விலைகள் துரிதமாக அதிகரித்தமையின் காரணமாக சர்வதேச பணவீக்க ரீதியிலான அழுத்தம் அதிகரித்துள்ளது. இதன்படி, வெளிவாரிக் காரணிகளினால் உருவாகின்ற பணவீக்க அழுத்தத்தின் காரணமாக உருவாகின்ற தாக்கத்தை உள்ளீர்ப்பதற்கு ஏதுவாயமைகின்ற விதத்தில் உள்நாட்டு பணவீக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 வது அட்டவணை
நடுத்தரகால பேரண்டப் பொருளாதார கட்டமைப்பு 2006 - 2011 (அ)

குறிகாட்டி	அலகுகள்	2006	2007(ஆ)	2008	எறிவுகள்		
					2009	2010	2011
உண்மைத் துறை							
சந்தை விலைகளில் மொ.உ.உ.	ரூ.பில்லியன்	2,939	3,578	4,307	5,047	5,923	6,911
உண்மை மொ.உ.உ. வளர்ச்சி	சதவீதம்	7.7	6.8	7.0	7.5	8.2	8.5
பணவீக்கம் / மொ.உ.உ. சுருக்கம்	சதவீதம்	11.3	14.0	12.5	9.0	8.5	7.5
மொத்த முதலீடு	மொ.உ.உ.%	28.0	27.9	30.0	31.5	32.5	33.2
தனியார் முதலீடு	மொ.உ.உ.%	20.9	20.7	22.0	23.0	24.4	25.2
அரச முதலீடு	மொ.உ.உ.%	7.1	7.2	8.0	8.5	8.1	8.0
அதிகரித்த மூலதன வெளியீட்டு விகிதம்	மொ.உ.உ.%	3.4	4.1	4.0	4.0	3.8	3.8
உள்நாட்டுச் சேமிப்புகள்	மொ.உ.உ.%	17.0	17.6	20.4	22.1	23.3	24.5
தனியார் சேமிப்புகள்	மொ.உ.உ.%	19.4	19.2	19.5	20.3	20.8	21.6
அரச சேமிப்புகள்	மொ.உ.உ.%	-2.4	-1.6	0.9	1.8	2.5	2.9
தேசிய சேமிப்பு	மொ.உ.உ.%	22.3	23.4	25.7	27.4	28.5	29.5
வெளிநாட்டுத் துறை							
வர்த்தக இடைவெளி	ஐ.அ.டொ.மில்.	-3,371	-3,560	-3,970	-4,365	-4,803	-5,149
ஏற்றுமதிகள்	ஐ.அ.டொ.மில்.	6,883	7,7740	8,529	9,395	10,339	11,356
இறக்குமதிகள்	ஐ.அ.டொ.மில்.	10,254	11,301	12,499	13,760	15,142	16,505
பணிகள்	ஐ.அ.டொ.மில்.	257	238	312	370	414	478
பெறுகைகள்	ஐ.அ.டொ.மில்.	1,625	1,712	1,938	2,156	2,364	2,592
கொடுப்பனவுகள்	ஐ.அ.டொ.மில்.	1,368	1,474	1,626	1,786	1,949	2,114
நடைமுறைக் கணக்கு நிலுவை	ஐ.அ.டொ.மில்.	-1,498	-1,369	-1,545	-1,664	-1,881	-1,974
நடைமுறைக் கணக்கு நிலுவை	மொ.உ.உ.%	-5.3	-4.2	-4.0	-3.9	-3.9	-3.7
மொத்த நிலுவை	ஐ.அ.டொ.மில்.	204	531	400	396	388	376
வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் (இறக்குமதி மாதங்கள்)	மாதங்கள்	3.0	3.3	3.3	3.2	3.2	3.2
படுகடன் பணி விகிதம் (ஈ)	சதவீதம்	12.8	13.0	14.9	13.3	9.6	8.8
இறைத்துறை							
வருவாய்	மொ.உ.உ.%	16.3	15.8	17.4	18.0	18.5	18.5
செலவு	மொ.உ.உ.%	24.3	23.5	24.2	23.9	23.7	23.3
நடைமுறைக் கணக்கு நிலுவை	மொ.உ.உ.%	-2.4	-1.6	0.9	1.8	2.5	2.9
மொத்த வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறை	மொ.உ.உ.%	-8.0	-7.7	-6.8	-5.8	-5.2	-4.8
உள்நாட்டு நிதியிடல்	மொ.உ.உ.%	5.6	3.6	3.6	2.6	2.2	2.1
நிதியியல் துறை (உ)							
ஒதுக்குப் பண வளர்ச்சி	சதவீதம்	21.2	10.2	15.0	15.0	14.5	14.5
விரிந்த பண வளர்ச்சி (M_{2b})	சதவீதம்	17.8	16.6	15.5	15.5	15.0	15.0
குறுகிய பண வளர்ச்சி (M_1)	சதவீதம்	12.6	2.7	5.5	5.5	5.0	5.0
தனியார் துறைக் கொடுகடனின் வளர்ச்சி	சதவீதம்	24.0	19.3	17.5	17.0	16.5	16.8
அரச துறைக் கொடுகடனின் வளர்ச்சி	சதவீதம்	38.8	8.9	-3.1	-0.7	-0.7	-0.7

(அ) 2008 மார்ச் மாதம் நடுப்பகுதியாகின்ற போது இருந்த தகவல்களின் அடிப்படையில்.
(ஆ) தற்காலிகமானவை
(இ) வணிக ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்களின் சதவீதமாக மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்.
(ஈ) பெயரளவிலான மொ.உ.உ. பெறுமதிகள் திருத்தப்பட்டமையின் காரணமாக 2008 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வுகூறப்பட்ட அரசிறைத் துறையின் விகிதாசாரங்கள் 2008 வரவு செலவுத் திட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள விகிதாசாரங்களுக்கு மாற்றமானவையாயுள்ளன.
(உ) ஆண்டின் இறுதிப் பெறுமதியில் புள்ளிக்குப்புள்ளி வளர்ச்சி

மூலம்: நிதி, திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி தொகை மதிப்பு,
புள்ளிவிபரவியல் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தத்தினைக் கட்டுப்படுத்துதல் முக்கியமாகும். இதற்கிணங்க, நாணயக் கொள்கையினை, தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாயிருக்காத வகையில், அதிகரிக்கின்ற உள்நாட்டுக் கேள்வியால் உருவாகின்ற பணவீக்க ரீதியிலான அழுத்தத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் நெறிப்படுத்தல் வேண்டும்.

அதேநேரம், உற்பத்தித் திறனை அதிகரித்தல் மற்றும் நிரம்பலை அதிகரித்தலின் ஊடாக நிரம்பல் துறைக் காரணிகளை சாதகமான விதத்தில் வழிப்படுத்தல் தொடர்பிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

வலுசக்திப் பாதுகாப்பு

பெற்றோலியத்தின் தேறிய இறக்குமதியாளர் என்ற வகையில் இலங்கை உலக சந்தையில் பெற்றோலிய விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துச் செல்கின்ற சவாலுக்கு இதுவரை முகம்கொடுத்திருந்த போதிலும், எண்ணெய் விலைகள் தாக்குப் பிடிக்கக்கூடிய மட்டத்தைத் தாண்டிச் செல்வதாயிருப்பின் அது வெளிநாட்டுத் துறையை கடும் பிரச்சினைக்கு உள்ளாக்கலாம். 2008 ஆம் ஆண்டில் இலங்கையில் பெற்றோலிய இறக்குமதிகளுக்கான செலவினம் ஐ.அ. டொலர் 3 பில்லியனைத் தாண்டலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளதோடு, இது இலங்கையின் மொத்த இறக்குமதிச் செலவினத்தில் 25 சதவீதமாகும். இதன்படி, இந்நாட்டிற்கு வெளிநாட்டு மூலங்களிலிருந்து போதியளவு பணம் கிடைக்காதிருப்பின் அது சென்மதி நிலுவையில் பெரும் தாக்கத்தை உருவாக்கும். ஆதலால் வலுசக்திச் சிக்கனத்துடன் கூடிய கருவிகளைப் பயன்படுத்துவதன் மூலம் பெற்றோலிய இறக்குமதியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், உயர் எரிபொருள் பயன்பாட்டினைக் கொண்ட மோட்டார் வாகன இறக்குமதியை ஊக்கமிழக்கச் செய்தல், வீதி நெருக்கடியைக் கட்டுப்படுத்தல், சர்வதேச விலை அதிகரிப்புகளை இறுதி நுகர்வோர் மீது சுமத்துதல், அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள் மற்றும் அரச மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் மோட்டார் வாகனங்கள் மற்றும் ஏனைய வலுசக்திப் பயன்பாட்டினை சிக்கனமாக மேற்கொள்ளுதல் அதேபோன்று வலுசக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதன் தேவையைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வூட்டல் ஆகிய செயற்பாடுகளின் மூலம் வலுசக்திப் பாதுகாப்பினை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதன் மூலம் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டில் பெற்றோலிய விலைகள் அதிகரிப்பதன் மூலம் உருவாகின்ற தாக்கத்தினை ஓரளவு குறைக்கலாம்.

முடிவுரை

பொருளாதாரத்திலுள்ள மேற்படி சவால்களை வெற்றிகொண்டு, அப்போதைக்குள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கி நடுத்தர கால ரீதியில் 8 சதவீதமான நிலைத்திருக்கத்தக்க பொருளாதார வளர்ச்சியை ஈட்டிக்கொள்ளுதல் குறிக்கோளாயுள்ளது.

எவ்வாறாயினும், எதிர்பார்க்கின்ற வளர்ச்சிப் பாதையில் பிரவேசிக்கின்ற போது முன்னர் குறிப்பிட்டுள்ள பொருளாதார முன்நிபந்தனைகளை வெற்றி கொள்ளுதல் வேண்டும் என்ற சவால்களுக்கு மேலதிகமாக, ஏனைய வெளிவாரி மற்றும் உள்ளகக் காரணிகளின் தாக்கத்தினையும் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும். குறிப்பாக வெளித் தரப்பினர்கள் தமது பகுப்பாய்வுகளின் மூலம், சர்வதேச நிலவரங்கள் மற்றும் ஏனைய உள்ளகக் காரணிகள் அண்மிய எதிர்காலத்தில் வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பதை சுட்டிக்காட்டியுள்ளனர். ஆசிய அபிவிருத்தி வங்கியின் 2008 ஆம் ஆண்டு அறிக்கையின் மூலம், உலகின் பிரதானமான பொருளாதாரங்களின் வளர்ச்சி மந்தகதியை அடைந்துள்ளதைத் தொடர்ந்து பிரதானமான ஏற்றுமதிச் சந்தையில் தாக்கம் ஏற்பட்டு அதன் மூலம் வளர்ச்சியில் தாக்கம் ஏற்படலாம் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆதலால், எதிர்கால வளர்ச்சிப் பாதையை உறுதி செய்துகொள்கின்ற போது உலகின் ஏனைய சந்தைகள் வரை பல்வகைப்படுத்தலின் ஊடாக ஒருசில சந்தைகளில் மட்டும் தங்கியிருப்பதைக் குறைத்தல், நிதி வளங்களின் விரயம் மற்றும் தனியார் துறையினை புறக்கணித்தல் நடைபெறுவதைத் தவிர்த்தல், நீடித்து நிலைத்திருக்கத்தக்க சமாதானத்தை அடைதல் ஆகியன தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மைத் துறை

சுசந்த ஆரியரத்ன

பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

2007 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரத்தில் உண்மைத் துறை சிறந்த செயற்பாட்டினைக் காட்டியது. பண்டங்கள் மற்றும் பணிகள் உற்பதியில் நடைபெற்ற வளர்ச்சியை பிரதிபலிக்கின்ற வகையில், 2007 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 2005-2007 வரையிலான மூன்று ஆண்டுகளினுள் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 6 சதவீதத்தை தாண்டியதோடு, இது சுதந்திரத்தின் பின்னர் தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் 6 சதவீதத்தைத் தாண்டி வளர்ச்சியடைந்த முதலாவது சந்தர்ப்பமாக இருந்தது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியின் வரலாற்று ரீதியிலான சராசரி 4-5 சதவீதமாயிருந்ததால், இப் புதிய போக்கானது இலங்கை மிக உயர் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ளதென்பதை அறிவிக்கின்றது. தனி ஆளுக்குரிய வருமானம் ரூபா 178,830 (ஐ.அ.டொலர் 1617) ஆக மாறி இலங்கை சர்வதேச வகைப்படுத்தலின் கீழ் நடுத்தர வருமானம் பெறுகின்ற பிரிவில் தொடர்ச்சியாக மேல்நோக்கிச் சென்றுகொண்டுள்ளதைச் சுட்டிக்காட்டுகின்றது. பண்டங்கள் மற்றும் பணிகள் உற்பத்தியிலான வளர்ச்சியின் ஊடாக புதிய பொருளாதாரச் செயற்பாடுகளின் பொருட்டு அதிக தொழில் கேள்வி உருவாக்கப்பட்டமையின் காரணமாக, தொழிலின்மை வீதம் 6.0 சதவீதம் வரை குறைவடைந்ததோடு, இதுவரை அறிக்கையிடப்பட்ட ஆகக் குறைந்தளவு தொழிலின்மை வீதமாக இது இருந்தது. எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கியினால் கடைப்பிடிக்கப்பட்ட கடுமையான நிதியியல் கொள்கைகளுக்கு மத்தியில்கூட, பணவீக்க அழுத்தம் அதிகரித்தமையை ஆண்டினுள் காணக்கூடியதாயிருந்தது. தொகை மதிப்பீட்டு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தால் கணிப்பீடு செய்யப்படுகின்ற புதிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் பிரகாரம், ஆண்டுச் சராசரி பணவீக்கம் 15.8 சதவீதமாக இருந்தது.

பொருளாதார வளர்ச்சி

6.8 சதவீதமான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சிக்கு பொருளாதாரத்தின் பிரதானமான மூன்று துறைகளினதும் பங்களிப்புக் கிடைத்தது. கைத்தொழில் துறை மற்றும் பணிகள் துறை முறையே 7.6 சதவீதத்தாலும், 7.1 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்ததோடு, வேளாண்மைத் துறையின் வளர்ச்சி 3.3 சதவீதமாக இருந்தது. பணிகள் துறை முழுமொத்தப் பொருளாதார வளர்ச்சியிலும் மிக உயர்ந்தளவு பங்களிப்பை (62 சதவீதம்) காட்டியது. 2007 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சியானது எரிபொருள் விலைகள் சர்வதேச சந்தையில் அதிகரித்தமை, நாட்டினுள் பாதுகாப்பு நிலைமைகளில் உருவாகிய போக்குகள், சீரற்ற காலநிலை மற்றும் அதிகரித்துச் செல்கின்ற பணவீக்கம் ஆகிய உள்நாட்டு ரீதியிலும் வெளிநாட்டு ரீதியிலும் உருவாகிய பல சவால்களுக்கு மத்தியில் அறிக்கையிடப்பட்டதாக இருந்தது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 7.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2007 ஆம் ஆண்டில் பொருளாதார வளர்ச்சி ஓரளவு மந்தகதியினைக் காட்டியது.

கைத்தொழில் துறை 2006 ஆம் ஆண்டின் 8.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2007 ஆம் ஆண்டில் 7.6 வீதத்தால் வளர்ச்சியடைந்ததோடு, முழுமொத்த உற்பத்தியின் வளர்ச்சியில் 32 சதவீதப் பங்களிப்பை வழங்கியது. கைத்தொழில் துறைக்குரிய அனைத்து உப துறைகள் (அதாவது, சுரங்கத் தொழிலும், கல்லுடைத்தலும், தயாரிப்புத் தொழில், மின்வலு, எரிவாயு, நீர், மற்றும் கட்டடவாக்கம் ஆகிய துறைகள்) நான்கினதும் சிறந்த செயற்பாடு 2007 ஆம் ஆண்டில் கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்குக் காரணமாயிருந்தது.

சேர் பெறுமதியில் காட்டப்படுகின்ற அதிகளவிலான பங்களிப்பின் காரணமாகவும், அதிகளவிலான தொழில் நிலையை உருவாக்குகின்ற மற்றும் அதிகளவிலான ஏற்றுமதி வருவாயைப் பெற்றுத்தருவதன் காரணமாகவும் கைத்தொழில் துறையில் மிகவும் முக்கியமான உப துறையாக கைத்தொழில் உற்பத்தித் துறை விளங்குகின்றது. பாரிய மற்றும் நடுத்தர அளவிலான தொழிற்சாலைகளில், உற்பத்தியை வளர்ச்சியடையச் செய்கின்ற தொழிற்சாலை உற்பத்தி துறையே உற்பத்திக் கைத்தொழில் துறையில் மிகவும் முக்கியமான உப துறையாக விளங்குகின்றது. மேற்படி உபதுறை 2007 இல் 6.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததோடு, பிரதானமான உள்நாட்டுச் சந்தையை முன்னிட்டானதும் அதேபோன்று ஏற்றுமதியை முன்னிட்டானதுமான கைத்தொழில்களின் வளர்ச்சியே இதற்குக் காரணமாயிருந்தது.

2006 ஆம் ஆண்டில் 14.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த மின்வலு, எரிவாயு, நீர் துறையின் வளர்ச்சியானது 2007 இல் 4.6 சதவீதமாக இருந்தது. மேற்படி மந்தகதியிலான வளர்ச்சிக்கு, முக்கியமாக கடந்த வருடத்தில் 14.2 சதவீதத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியடைந்த மின்வலு உப துறையின் விரிவாக்கம், 2007 ஆம் ஆண்டில் 4.6 சதவீதத்திற்கு மட்டுப்பட்டமையே காரணமாயமைந்தது. குறைந்த செலவினத்தைக் கொண்ட நீர் மின்வலு உற்பத்தியானது 2007 ஆம் ஆண்டில் நிலவிய சீரற்ற காலநிலையின் காரணமாக வீழ்ச்சியடைந்தமை, மின்வலுத் துறையின் சேர் பெறுமதியிலான மந்தகதிக்குக் காரணமாயிருந்தது. சுரங்கத் தொழில் மற்றும் கல்லுடைத்தல் துறை ஆண்டினுள் 24 சதவீதத்தால் விரிவடைந்ததோடு, அதற்கு இரத்தினக் கற்கள் மற்றும் ஏனைய சுரங்க உற்பத்தித் தொழிற்பாடுகளின் உற்பத்திகள் ஆண்டினுள் துரிதமாக அதிகரித்தமையே காரணமாயிருந்தது. இவற்றைத் தவிர, கைத்தொழில் துறைக்குரிய கட்டடவாக்கத் துறையானது, தனியார் துறை மற்றும் நிர்மாணிப்புத் தொழிற்துறை விரிவடைந்தமையின் காரணமாக 9.0 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

பணிகள் துறை 2007 ஆம் ஆண்டில் 7.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து, முழுமொத்தப் பொருளாதார வளர்ச்சியில் 62 சதவீதப் பங்களிப்பை வழங்கிய போதிலும், கடந்த ஆண்டின் 7.7 சதவீத வளர்ச்சியோடு ஒப்பிடுகின்றபோது 2007 ஆம் ஆண்டில் வளர்ச்சி ஓரளவு மந்தகதியினைக் காட்டியது. அப்போதைய பாதகமான பாதுகாப்பு நிலைமையின் காரணமாக சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துறையில் உருவாகிய பின்னடைவே மேற்படி மந்தகதிக்கு ஏதுவான ஒரு காரணியாயிருந்தது. பணிகள் துறையின் வளர்ச்சிக்கு முக்கியமாக, அஞ்சல் மற்றும் தொடர்பூட்டல், துறைமுகப் பணிகள், போக்குவரத்துத் தொழிற்பாடுகள் மற்றும் நிதியியல் பணிகள் ஆகிய துறைகள் பங்களிப்புச் செய்தன.

2007 இல் பணிகள் துறையின் ஆகக் கூடுதலான வளர்ச்சி, போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துறையிலேயே அறிக்கையிடப்பட்டது. இத்துறைக்குரிய போக்குவரத்து, துறைமுகப் பணிகள், அஞ்சல் மற்றும் தொடர்பூட்டல் ஆகிய அனைத்து உப துறைகளினதும் செயற்பாடு இவ்வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. இத்துறைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க துறையாக, பல வருடங்களாக உயர் வளர்ச்சி வீதத்தைக் காட்டிய தொடர்பூட்டல் துறையே விளங்கியது. பல வருடங்களாக இத்துறையின்பால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் காரணமாகவும் புதிய தொழில்நுட்ப உற்பத்திகள் பயன்படுத்தப்பட்டமையின் ஊடாகவும் இத்துறை தொடர்ச்சியாக வளர்ச்சிச் செயற்பாட்டினைக் காட்டிவருகின்றது.

மொத்த, சில்லறை வர்த்தகத் துறை 2007 இல் 6.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததோடு, இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் உள்நாடு ஆகிய மூன்று துறைகளினதும் செயற்பாடு இதில் பங்களிப்புச் செய்தது. இதைத் தவிர, வங்கித் தொழில், காப்புறுதி ஆகிய துறைகளின் வளர்ச்சி 8.7 சதவீதமாயிருந்தது. ஆண்டினுள் நிலவிய உயர் மற்றும் தொடர்ந்த தளம்பல் நிலையுடன் கூடிய வட்டி வீதத்தின் முன்னிலையில் வங்கித் தொழில் துறைக்கு கடன் வழங்குதல் மற்றும் ஏனைய முதலீடுகளின் மூலம் உயர் வட்டி வருமானத்தை ஈட்ட முடியுமாயிருந்தது.

2007 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறையின் வளர்ச்சி 3.3 சதவீதமாக இருந்ததோடு, இது ஏனைய இரண்டு துறைகளினதும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்தில் இருந்தது. ஆண்டினுள் வேளாண்மைத் துறைக்குரிய அநேகமான உப துறைகள் (இறப்பர், தெங்கு, ஏனைய உணவுப் பயிர்கள், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பு ஆகியன) சிறந்த முறையில் செயற்பட்ட போதிலும் சீரற்ற காலநிலையின் காரணமாக பிரதானமான இரண்டு பயிர்களின் (தேயிலை மற்றும் நெல்) உற்பத்தி வீழ்ச்சியடைந்தமை, வேளாண்மைத் துறையின் முழுமொத்த வளர்ச்சியில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆண்டினுள் பன்னாட்டுச் சந்தையில் கமத்தொழில் பண்டங்களுக்கான விலைகள் பெருமளவு அதிகரித்த போதிலும் வேளாண்மைத் துறைக்கே உரியதான நிரம்பல் தடைகளின் காரணமாக, இத்தகைய விலை அதிகரிப்புகளுக்குப் பிரதிபலிப்பாக நிரம்பலை பெருமளவில் அதிகரிக்க முடியாதிருந்தது.

2007 இல் பொருளாதார வளர்ச்சியானது 2006 இல் அறிக்கையிடப்பட்ட 7.7 சதவீதத்திலிருந்து 6.8 சதவீதம் வரை ஓரளவு பின்டைவுக்கு உள்ளாவதற்கு பிரதானமாக, முழுமொத்தக் கேள்வியின் வளர்ச்சியில் தென்பட்ட மந்தகதியிலான நிலைமையே காரணமாக இருந்தது. அண்மைக் கால பொருளாதார வளர்ச்சியின் பொருட்டு, தொடர்ச்சியாக அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியே இயக்கத்தை வழங்கியது. இதே போக்கு 2007 ஆம் ஆண்டிலும் நிலவிய போதிலும், உள்நாட்டுக் கேள்வி வளர்ச்சியில் ஒருவித மந்தகதியிலான நிலைமையை இக்கால கட்டத்தில் காண முடியுமாயிருந்தது. இவ்வாறு உள்நாட்டு முழுமொத்தக் கேள்வி வீழ்ச்சியடைந்ததன் மூலம், இலங்கை மத்திய வங்கி தனது நிதியியல் கொள்கைக் கட்டமைப்பின் கீழ் கடைப்பிடித்த கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளின் தாக்கமே பிரதிபலித்தது. விலைகள் அதிகரிப்பதைக் குறைக்கும் நோக்கத்துடன் பண்டங்கள் மற்றும் பணிகளின் கேள்வி அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி கடைப்பிடித்த நிதியியல் கொள்கைகள் முழுமொத்தக் கேள்வியின் வளர்ச்சி குறைவடைவதற்குக் காரணமாயிருந்தது என்பதற்கும், இது பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதற்குமான சான்றுகள் உள்ளன.

முழுமொத்த முதலீட்டுச் செலவினம் 2007 ஆம் ஆண்டில் ரூபா 997 மில்லியனாக இருந்ததோடு, இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், 21.2 சதவீத வளர்ச்சியாக இருந்தது. எவ்வாறாயினும், முதலீட்டுத் தொழிற்பாடுகளின் வளர்ச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகத்திலான குறைவினைப் பிரதிபலிக்கின்ற வகையில், முதலீட்டு விகிதம் (முதலீடு/மொத்த உள்நாட்டு உற்பத்தி) 2006 ஆம் ஆண்டில் நிலவிய 28.0 சதவீதத்திலிருந்து 27.9 சதவீதம் வரை சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டியது. முதலீட்டு விகிதம் இவ்வாறு வீழ்ச்சியடைவதற்கு, முன்னைய ஆண்டில் 28 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த தனியார் முதலீடுகளின் வளர்ச்சி 2007 ஆம் ஆண்டில் 14.4 சதவீதத்திற்கு மட்டுப்பட்டமையே காரணமாக இருந்தது. முழுமொத்த முதலீட்டில் 81 சதவீத பங்களிப்பைக் காட்டிய தனியார் முதலீடுகள் 2007 ஆம் ஆண்டில் பெருமளவில், ஏற்றுமதிக் கைத்தொழில், தொடர்பூட்டல், ஆதனங்கள், வர்த்தகம், கல்விப் பணிகள் மற்றும் சுகாதாரப் பணிகள் ஆகிய துறைகளின் பேரிலேயே மேற்கொள்ளப்பட்டன. ஆயினும், முன்னைய ஆண்டில் 10 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்த அரச முதலீடுகள் 2007 ஆம் ஆண்டில் 61 சதவீதத்தால் அதிகரித்தன. அரச முதலீடுகள் பிரதானமாக பெருந்தெருக்கள், நிர்மாணிப்பு, அபிவிருத்தி, தனியார் துறை பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்ட மின்வலுக் கருத்திட்டங்கள் ஆகியவற்றிலேயே மேற்கொள்ளப்பட்டன.

தனியார் மற்றும் அரசு ஆகிய இரு துறைகளினதும் சேமிப்புகள் உள்ளடங்கிய உள்நாட்டுச் சேமிப்பு 2007 ஆம் ஆண்டில் ரூபா 629 பில்லியனாக மதிப்பிடப்பட்டிருந்ததோடு, ரூபா 686 பில்லியனாக இருந்த தனியார் துறை சேமிப்புகள் மூலம் ரூபா 58 பில்லியனான அரச துறையின் சேமிப்பின்மையின் (எதிர்மறை சேமிப்பு) குறைபாடு நிரப்பப்பட்டது. உயர் இலாபகரத் தன்மை, நிறுவனத் துறையின் சேமிப்பினை அதிகரிக்கச் செய்ததோடு, வட்டி வீத அதிகரிப்பு குடும்பத் துறை சேமிப்பை ஊக்குவித்தது. இதற்கிடையே அரச வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கின் மீதியான அரச சேமிப்புகள் எதிர்மறையான பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும், 2006 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17.7 சதவீதம் வளர்ச்சியடைந்திருந்தது. சேமிப்புகள் அதிகரித்ததைத் தொடர்ந்து உள்நாட்டு சேமிப்பு விகிதமும் (உள்நாட்டு சேமிப்பு/மொ.உ.உ.) 17.0 சதவீதத்திலிருந்து 17.6 சதவீதம் வரை அதிகரித்தது. உள்நாட்டு சேமிப்பு விகிதம் அதிகரித்தமை மற்றும் முதலீட்டு விகிதம் வீழ்ச்சியடைந்தமையின் காரணத்தினால் 2007 ஆம் ஆண்டில் வளங்களின் இடைவெளி அதாவது உள்நாட்டு சேமிப்பு மற்றும் முதலீட்டு விகிதங்களுக்கு இடையிலான மாற்றமும் குறைவடைந்தது.

தேசிய உற்பத்தியிலான வளர்ச்சியை தொழில் சந்தையில் பிரதிபலிக்கின்ற வகையில் தொழிலின்மை விகிதம் 2006 ஆம் ஆண்டில் நிலவிய 6.5 சதவீதத்திலிருந்து 2007 ஆம் ஆண்டில் 6.0 சதவீதம் வரை சாதனை மட்டத்திற்குக் குறைவடைந்தது. பொருளாதார செயற்பாட்டில் நடைபெற்ற விரிவாக்கத்திற்கு மேலதிகமாக, அரச மற்றும் தனியார் ஆகிய இரு துறைகளிலும் தொழில் உருவாக்கத்தின் பொருட்டு பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டமை, தொழில் சந்தை பற்றிய தகவல்கள் பரப்பப்பட்டமை மற்றும் தொழில்சார் வழிகாட்டல்கள் பற்றிய நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டமை ஆகியன தொழலின்மை விகிதம் குறைவடைவதற்குக் காரணமாயமைந்தது. ஆயினும், கல்வி கற்றோர்களிடையே நிலவுகின்ற தொழிலின்மை நிலை தொடர்ந்து உள்ளதென்பதைப் பிரதிபலிக்கின்ற வகையில் க.பொ.த. (உயர் தரம்) மற்றும் அதனை விடக் கூடிய தகுதிகளைக் கொண்டவர்களிடையே தொழிலின்மை விகிதம் 11.6 சதவீதத்திலிருந்து 11.8 சதவீதம் வரை அதிகரித்தது.

முழுமொத்த உற்பத்தியிலும் தொழில் சந்தையிலும் அறிக்கையிடப்பட்ட பாதகமான அபிவிருத்திக்கு எதிரான விதத்தில் 2007 ஆம் ஆண்டில் பணவீக்கம் பாதகமான போக்கைக் காட்டியது. புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மூலம் அளவிடப்பட்டவாறு பொது விலை மட்டம் உயர்வடைவதன் போக்கைக் காட்டியதோடு, 2006 ஆம் ஆண்டில் 10 சதவீதமான அதிகரிப்புடன் ஒப்பிடுகின்றபோது 2007 ஆம் ஆண்டில் விலை மட்டத்தின் சராசரி ஆண்டு அதிகரிப்பு 15.8 சதவீதமாயிருந்தது. உள்நாடு மற்றும் வெளிநாடு ஆகிய இரு துறைகளினதும் காரணிகளின் ஒன்றிணைந்த பெறுபேறாக, மேற்படி பாதகமான நிலைமை உருவாகியது. அரிசிச் சந்தையில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதற்கு உள்நாட்டு ரீதியில் ஏதுவாயமைந்த பிரதானமான காரணிகளாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பிரதானமான நெல் உற்பத்திப் பிரதேசங்களில் தாக்கத்தை ஏற்படுத்திய பயங்கரவாதக் குழப்பங்கள், சீரற்ற காலநிலை மற்றும் உயர்ந்தளவிலான கோதுமை விலையின் காரணமாக மாற்றீட்டுப் பெறுபேறாக மேலெழுந்த அரிசிக்கான கேள்வியின் அதிகரிப்பு ஆகியன விளங்கின. குறைந்தளவிலான நிரம்பல் மற்றும் விநியோகத்திற்கான உயர்ந்தளவு செலவினங்களும் உள்நாட்டுக் கமத்தொழில் உற்பத்திகளின் விலை அதிகரிப்பில் தாக்கத்தை ஏற்படுத்தின. வெளிநாட்டுத் துறையைப் பொறுத்தவரை, உலக சந்தையில் எண்ணெய் மற்றும் எரிவாயு விலைகளிலான தொடர்ச்சியான அதிகரிப்பின் காரணமாக அவற்றின் உள்நாட்டு விலைகளை பல தடவைகள் அதிகரிப்பதற்காக சீர்செய்ய நேரிட்டதோடு, இது நுகர்வுப் பண்டங்களின் விலை அதிகரிப்பின் தீவிரத் தன்மையில் பல்வேறு விதத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதேபோன்று, உலக நிரம்பலிலான பற்றாக்குறை மற்றும் கேள்வி அதிகரித்தலுடன் இணைந்துள்ள பன்னாட்டுச் சந்தையின் பாதகமான வளர்ச்சிகள், குறிப்பாக ஆண்டின் இரண்டாவது பகுதியில் கோதுமை மற்றும் பால் உணவுப் பொருட்கள் ஆகிய பிரதானமான இறக்குமதி உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிக்கச் செய்தன. ஆண்டினுள் உண்மைச் சம்பளம் அதிகரித்தமையும் விலைகளில் ஓரளவு அமுக்கத்தை ஏற்படுத்தியது. கடுமையான நாணயக் கொள்கை நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் கேள்வியின் அமுக்கம் குறிப்பிடத்தக்களவில் குறைக்கப்பட்ட போதிலும், மேற்படி வெளிவாரியான வளர்ச்சிகள் மற்றும் நிரம்பல் அதிர்ச்சிகள் விலைகளில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாணயம் மற்றும் நிதியியல் துறை

காஞ்சன தென்னகோன்
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

2007 ஆம் ஆண்டில் நாணயத் துறையின் வளர்ச்சிகள்

மத்திய வங்கியின் கேள்வி முகாமைத்துவக் கொள்கை 2007 இன் முதற் பகுதியில் பணவீக்கத்தை வீழ்ச்சியடையச் செய்வதற்குக் காரணமாயமைந்த போதிலும், பெற்றோலியம் மற்றும் பன்னாட்டு வர்த்தகப் பொருட்களின் விலைகள் துரிதமாக அதிகரித்தமையின் காரணமாக பணவீக்கம் மீண்டும் ஆண்டின் இறுதியில் உயர் பெறுமானத்தை அறிக்கையிட்டது. புதிய கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (CCPI-N) புள்ளி அடிப்படையிலான மாற்றத்தின் பிரகாரம், 2007 இன் முதல் அரைப் பகுதியில் 13-15 சதவீதங்களுக்கு இடையிலான வீச்சிடையிலிருந்த பணவீக்கம், ஆண்டின் இறுதியில் 18.8 சதவீதமாக அதிகரித்தது. ஆண்டுச் சராசரி பணவீக்கமும் 2006 இல் 10 சதவீதத்திலிருந்து 2007 ஆம் ஆண்டில் 15.8 சதவீதம் வரை அதிகரித்தது.

2007 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட உயர் பணவீக்கத்திற்கு பிரதானமாக, வெளிவாரிக் காரணங்களான பெற்றோலியம் மற்றும் பன்னாட்டு வர்த்தகப் பொருட்களின் விலை அதிகரித்தமை ஏதுவாயிருந்ததோடு, அதனைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி தனது கடுமையான நாணயக் கொள்கை உறுதிப்பாட்டினை 2007 ஆம் ஆண்டினுள் தொடர்ந்தும் பலப்படுத்தியது. உயர் பண விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதன் ஊடாக கேள்வியின் மூலம் ஈர்க்கப்பட்ட பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துதல் கடுமையான நாணயக் கொள்கையின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பணவீக்கம் உயர் பெறுமானத்தை அறிக்கையிட்ட போதிலும், நிவாரண உதவிகளால் அடக்கப்பட்டிருந்த பணவீக்க ரீதியிலான அழுத்தம் நிவாரணங்கள் நீக்கப்பட்டமையைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்டதன் மூலம் எதிர்காலப் பணவீக்கத்திற்கு அதன் மூலம் ஏற்படக்கூடிய தாக்கம் செயலிழக்கச் செய்யப்பட்டது. மத்திய வங்கியால் கடைப்பிடிக்கப்படுகின்ற கடுமையான நாணயக் கொள்கை உறுதிப்பாட்டின் முழுமையான தாக்கம் எதிர்கால பணவீக்கத்தினை வீழ்ச்சியடையச் செய்வதற்கு உதவியாயமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இலக்காயிருக்கின்ற ஒதுக்குப் பண வளர்ச்சியை 2007 ஆம் ஆண்டில் வெற்றிகரமாக இலக்கிடப்பட்ட மட்டத்திலேயே பேணிவருவதற்கு மத்திய வங்கியினால் அமுலாக்கப்பட்ட கடுமையான நாணயக் கொள்கை உதவியாயமைந்தது. இதன்படி, ஒதுக்குப் பண விரிவாக்கம் 2006 ஆம் ஆண்டில் நிலவிய 21.2 சதவீத மட்டத்திலிருந்து 2007 ஆம் ஆண்டில் 10.2 சதவீதம் வரை குறைவடைந்தது. ஆதலால், ஒதுக்குப் பணம் அதிகரித்தல் எனப்படுகின்ற புதிய நாணயங்களை வெளியிடல் ரூபா 24.6 பில்லியனாக இருந்ததோடு, இது 2006 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 17.4 பில்லியன் குறைவைக் காட்டுகின்றது.

மத்திய வங்கியினால் செயற்படுத்தப்பட்ட கடுமையான நாணயக் கொள்கை உறுதிப்பாட்டுக்குப் பிரதிபலிப்புக் காட்டுகின்ற வகையில் விரிந்த பண நிரம்பலின் விரிவாக்கமும் குறைவடைந்த போதிலும், அது இலக்கிடப்பட்ட மட்டத்தை விட உயர்வாக இருந்தது. 2007 ஆம் ஆண்டின் இறுதியில் விரிந்த பண நிரம்பலின் வளர்ச்சி 16.6 சதவீதமாக இருந்ததோடு, 2006 ஆம் ஆண்டில் இது 17.8 சதவீதமாக இருந்தது. வங்கி முறைமைக்குரிய தேறிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தமை விரிந்த பண நிரம்பலின் விரிவாக்கத்திற்கு பிரதானமான காரணமாக இருந்தது. அரச தேறிய கடன்கள், அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் தனியார் துறைக் கடன்கள், தேறிய உள்நாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்ததோடு, மத்திய வங்கி அரச வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகளைக் கொள்வனவு செய்தமையின் காரணமாக தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தன. ஆண்டினுள் அரசாங்கம் வங்கி முறையிலிருந்து பெற்ற கடன் ரூபா 16.8 பில்லியனாக இருந்ததோடு, அரச கூட்டுத்தாபனங்களிலிருந்து பெறப்பட்ட கடன் ரூபா 17.6 பில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும், அரசாங்கம் தனது முதலாவது சர்வதேச முறிகளை வழங்கியதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணி கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து, முதல் மூன்று காலாண்டினுள் பெருமளவில் அதிகரித்த வங்கி முறையிலிருந்து பெறப்பட்ட தேறிய அரச கடன் இறுதிக் காலாண்டில் குறைவடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 வது அட்டவணை
பணக் கூட்டுக்களின் வளர்ச்சி

ரூபா பில்லியன்

தலைப்பு	2006 இறுதியில்	2007 இறுதியில் (அ)	மாற்றம் 2006 தொகை	மாற்றம் 2006 %	மாற்றம் 2007 தொகை	மாற்றம் 2007 %
1. வெளிநிற்கும் நாணயம்	157.2	173.4	24.8	18.7	16.2	10.3
1.1 பொதுமக்களிடமுள்ள நாணயம்	135.0	147.2	20.9	18.4	12.2	9.0
1.2 வர்த்தக வங்கிகளிடமுள்ள நாணயம்	22.2	26.2	3.9	21.2	4.0	18.0
2. மத்திய வங்கியிடமுள்ள வர்த்தக வங்கிகளின் வைப்புகள்	82.6	91.0	17.1	26.1	8.4	10.2
3. மத்திய வங்கியிடமுள்ள அரச முகவராண்மைகளின் வைப்புகள்	-	-	-	-	-	-
4. ஒதுக்குப் பணம் (1+2+3)	**239.9**	**264.4**	**42.0**	**21.2**	**24.6**	**10.2**
5. வர்த்தக வங்கிகளிடமுள்ள பொதுமக்களுக்குரிய கேள்வி வைப்புகள்	124.7	119.4	8.1	6.9	-5.3	-4.2
6. குறுகிய பண நிரம்பல் M_1 (1.1+5)	**259.7**	**266.6**	**29.0**	**12.6**	**6.9**	**2.7**
7. வர்த்தக வங்கிகளிடமுள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புகள்	733.6	881.2	141.4	23.9	147.6	20.1
8. விரிந்த பண நிரம்பல் M_2 (6+7)	**993.3**	**1,147.7**	**170.4**	**20.7**	**154.5**	**15.6**
9. வெளிநாட்டு நாணய வைப்புகள் (ஆ)	211.3	256.3	11.9	6.0	45.0	21.3
10. திரண்ட விரிந்த பண நிரம்பல் M_{2b} (8+9)	**1204.6**	**1,404.0**	**182.3**	**17.8**	**199.5**	**16.6**
பணப் பெருக்கி M_{2b}	5.02	5.31				
சுற்றோட்ட வேகம் M_{2b} (இ)	2.65	2.73				

(அ) தற்காலிகமானவை

(ஆ) கரைகடந்த வங்கிக் கூறுகளின் வதிவுடையோர் வைப்புகள் மற்றும் உள்நாட்டு வங்கிக் கூறுகளின் வெளிநாட்டு நாணய வைப்புகளில் உள்நாட்டுப் பொறுப்புகளாக அடையாளம்காணப்பட்ட ஒரு பகுதி உள்ளடங்கியுள்ளது.

(இ) ஆண்டினுள் நாணயத்தின் சுற்றோட்ட வேகம் காட்டப்பட்டுள்ளதோடு, மொ.உ.உ. பெறுமானங்கள் தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தேசிய கணக்கு மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

வரைபடம் 1

பணவீக்கம் தொர்பில் உணவுப் பொருள் விலைகளின் தாக்கம்



கடுமையான நாணயக் கொள்கையின் ஊடாக பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு ஏற்படக்கூடிய பாதகமான தாக்கங்கள் குறைவடையக்கூடியவாறு கேள்வி அழுத்தத்தை மட்டுப்படுத்துகின்ற நோக்கத்துடன் செயற்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை பெரும் சவாலுக்குரியதொரு விடயமாக இருந்தது. இதன் பிரகாரம், 2007 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மத்திய வங்கி தனது கொள்கை வட்டி வீதத்தை அதாவது, மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தை 50 அடிப்படை எண்களால் அதிகரிக்கச் செய்தது. அதேபோன்று வர்த்தக வங்கிகளின் கடன் படைக்கும் ஆற்றலை மட்டுப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியின் கீழ் கடன் பெறுதல் மட்டுப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக, வங்கி முறையிலிருந்த மேலதிக திரவத் தன்மையை நீக்கும் பொருட்டு கடுமையாக திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் ஈடுபடுதல், வங்கிகள் அதிகளவில் கடன் வழங்குவதை ஊக்கமிழக்கச் செய்யும் பொருட்டு நாகரிகமான உத்திகளைப் பயன்படுத்துதல் மற்றும் கடன் விரிவாக்கத்தின் மூலம் உருவாகக் கூடிய இடர்நேர்வுகளிலிருந்து வங்கிகளைப் பாதுகாக்கும் பொருட்டு விதிக்கப்பட்ட பல்வேறான முன்மதியுடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கை வட்டி வீதத்தை உயர்த்துதல், நிரந்தர அடிப்படையில் வங்கி முறையில் இருந்த மேலதிக திரவத் தன்மை உள்ளீர்க்கப்படல் மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகளின் கீழ் மத்திய வங்கியிலிருந்து நிதியங்களைக் கடனாகப் பெறுதல் மட்டுப்படுத்தப்படுதல் ஆகிய காரணங்களால் 2007 ஆம் ஆண்டில் சந்தை வட்டி வீதம் அதிகரித்தது. சந்தை வட்டி வீதம் அதிகரித்தமை அதிகளவிலான கடன் விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு உதவியாயமைந்தது. பெயரளவிலான வட்டி வீதம் உயர்வடைந்ததைத் தொடர்ந்து அநேகமான சந்தை உண்மை வட்டி வீதங்கள் ஆண்டினுள் சாதகமான திசையை நோக்கி நகர்ந்தமையைக் காணக்கூடியதாயிருந்தது.

அரச பிணை ஆவணங்களின் வட்டி வீதம் முதனிலைச் சந்தை திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதம் உயர்வடைவதற்கு ஏற்ப உயர்வடைந்ததோடு, கடுமையான நாணயக் கொள்கை உறுதிப்பாட்டிற்கு ஏற்ப வைப்புகள் மற்றும் கடன் வீதம் உயர்வடைந்தது.

வரைபடம் 2

நாணயச் சந்தை வட்டி வீதம்



அழைப்புப் பணச் சந்தை வட்டி வீதம் 12.36 – 42.25 சதவீதத்திற்கு இடையிலான விரிந்ததொரு வீச்சிடையினுள் மாற்றமடைந்ததோடு இதற்கு பிரதானமாக வர்த்தக வங்கிகளுக்கு இடையிலான திரவத் தன்மைகளின் சமமின்மை காரணமாயிருந்தது. எவ்வாறாயினும், ஆண்டினுள் அதன் சராசரி 14-17 சதவீதத்திற்கு இடையிலான வீச்சிடையில் நிலவியது. வரிக்கு சீர்செய்யப்பட்ட நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணச் சந்தை வட்டி வீதம் கொள்கை வட்டி வீத வீச்சிடையின் உயர் எல்லைக்கு அண்மையில் இருந்ததோடு, வர்த்தக வங்கிகளுக்கு இடையே ரூபா கொடுக்கல் வாங்கல்களின் பொருட்டு விற்பனை செய்கின்ற வீதத்தின் சராசரியான இலங்கை வங்கிகளுக்கு இடையிலான விற்பனை வீதமும் சந்தை வீதங்களுக்கு ஏற்ப அதிகரித்தது.

வரைபடம் 3

கொ.நு.வி.சு. மற்றும் கொ.நு.வி.சு. (புதிய) இன் புள்ளி ரீதியிலான அசைவுகள்



வரைபடம் 4

கொ.நு.வி.சு. மற்றும் கொ.நு.வி.சு. (புதிய) இன் ஆண்டுச் சராசரி அசைவுகள்



துல்லியமான நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு உதவியாயமைகின்ற துல்லியமானதும் நம்பகத் தன்மையுடன் கூடியதுமான பணவீக்க அளவீடொன்றிற்கான தேவைக்குத் தீர்வாக ஒரு புதிய நுகர்வோர் விலைச் சுட்டெண் 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை கொழும்பு நுகர்வோர் விலைச் சுடடெண்ணுடன் (CCPI) ஒப்பிடுகின்றபோது விலைகளின் முழுமொத்த வளர்ச்சியை மிகச் சிறந்த முறையில் பிரதிபலிக்கின்ற விலைச் சுட்டெண்ணாகக் குறிப்பிட முடியுமாயுள்ளது. துல்லியமான நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்ளும் பொருட்டு தேவையான மேலுமொரு முக்கியமான நடவடிக்கையாக பரீட்சித்துப் பார்க்கும் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட மாதாந்த பணவீக்க எதிர்பார்ப்பு பற்றிய மதிப்பீட்டைச் சுட்டிக்காட்டலாம். மேலும், நாணயக் கொள்கை நடவடிக்கைகளின் ஊடாக அடிப்படைப் பணவீக்கத்தில் உருவாகின்ற தாக்கத்தினைச் சிறந்த முறையில் எடுத்துக்காட்டுகின்ற அடிப்படை பணவீக்க அளவீடொன்றும் தொகை மதிப்பு, புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 வது அட்டவணை

முதன்மை நிதி நிறுவனங்களின் சொத்துக்கள்

	2006 (அ)		2007 (ஆ)	
	ரூபா பில்லியன்	முழு மொத்தத்தின் சதவீதமாக	ரூபா பில்லியன்	முழு மொத்தத்தின் சதவீதமாக
வங்கித் துறை	**2,635.0**	**70.6**	**3,068.5**	**71.0**
மத்திய வங்கி	492.8	13.2	561.9	13.0
உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் (இ)	1,786.9	47.9	2,100.0	48.6
உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்	355.3	9.5	406.6	9.4
வைப்புகளை ஏற்கும் ஏனைய நிதி நிறுவனங்கள்	**140.9**	**3.8**	**177.1**	**4.1**
பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்	108.2	2.9	142.5	3.3
கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்	27.8	0.7	28.7	0.7
சிக்கன, கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள்	4.9	0.1	5.9	0.1
ஏனைய சிறப்பியல்புவாய்ந்த நிதி நிறுவனங்கள்	**170.8**	**4.6**	**192.9**	**4.5**
சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகள்	78.0	2.1	96.0	2.2
முதனிலை வணிகர்கள்	49.9	1.3	54.2	1.3
வணிக வங்கிகள்	30.5	0.8	31.4	0.7
பங்குத் தரகர் கம்பனிகள்	5.7	0.2	3.8	0.1
கூறு நம்பிக்கைப் பொறுப்புகள்	5.4	0.1	6.3	0.1
தொழில்முயற்சி மூலதனக் கம்பனிகள்	1.3	0.0	1.1	0.0
கடன் தரப்படுத்தல் நிறுவனங்கள்	0.1	0.0	0.1	0.0
உடன்படிக்கைக்கு உட்பட்ட சேமிப்பு நிறுவனங்கள்	**786.8**	**21.1**	**884.6**	**20.5**
காப்புறுதிக் கம்பனிகள்	117.0	3.1	133.1	3.1
ஊழியர் சேம நிதியம்	492.1	13.2	560.0	13.0
ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்	67.0	1.8	78.8	1.8
ஏனைய சேம நிதியங்கள்	95.8	2.6	96.2	2.2
அரச சேவை சேம நிதியம்	15.0	0.4	16.5	0.4
மொத்தம்	**3,733.5**	**100.0**	**4,323.0**	**100.0**

(அ) திருத்தப்பட்டவை

(ஆ) தற்காலிகமானவை

(ஆ) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வங்கிக் கூறுகள் மற்றும் கரைகடந்த வங்கிக் கூறுகள் ஆகிய இரண்டு துறைகளினதும் இணைந்த சொத்துக்கள்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மத்திய வங்கி தனது நாணயக் கொள்கைக் கட்டமைப்பு, நாணய நிகழ்ச்சித் திட்டம், நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுகள் பற்றிய தகவல்களை தொடர்ச்சியாகப் பொது மக்களுக்கும் சந்தை பங்கேற்பாளர்களுக்கும் வழங்கியமை, நாணயக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்கின்ற செயற்பாட்டினை வளர்ப்பதற்கும் அதன் ஒழிவுமறைவற்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் உதவியாயமைந்தது. மேலும், 2007 சனவரி மாதம் இரண்டாந் திகதி வெளியிட்ட "2007 மற்றும் அதன் பின்னரான நாணயம் மற்றும் நிதித் துறையின் கொள்கை வழிகாட்டல்" மூலம் தனது நாணயக் கொள்கையைப் பற்றி பொது மக்களுக்கு முன்கூட்டி அறிவூட்டுகின்ற செயற்பாட்டினை முன்னரைப் போன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவேற்றியது. அதேபோன்று நாணயக் கொள்கை தீர்மானம் மேற்கொள்கின்ற செயற்பாட்டின் ஒழிவுமறைவற்ற தன்மையை மேலும் பலப்படுத்துகின்ற வகையில், அச்செயற்பாட்டினை சுதந்திரமாக விமர்சிக்கும் பொருட்டு கல்விமான்கள் மற்றும் தனியார் துறைத் தரப்பினர்கள் உள்ளடங்கிய ஒரு நாணயக் கொள்கை ஆலோசனைக் குழுவும் (Monetary policy Consultative Committee) தாபிக்கப்பட்டது.

நிதியியல் துறை

வெளிவாரி அதிர்ச்சிகளைப் போன்றே சவால்மிக்க உள்நாட்டு பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில்கூட 2007 ஆம் ஆண்டில் நிதியியல் துறை தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்தது. இலாபகரத் தன்மை, உயர் மூலதனமயமாக்கல் மற்றும் சொத்துக்களின் தரம் உயர்வடைதல் ஆகிய துறைகளிலான பங்களிப்பு முதன்மை நிதி நிறுவனங்களினுள் காணக்கூடிய தாயிருந்த சிறந்த நிதியியல் நிலைமைக்கு பெரும் உதவியாயமைந்தது. அதேபோன்று நிதியியல் துறையின் ஒழுங்குமுறையாக்கல் மற்றும் மேற்பார்வை 2007 ஆம் ஆண்டினுள் மேலும் பலப்படுத்தப்பட்டது.

வங்கிகளின் பொருட்டு 2008 ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்குவதற்கு உத்தேசமாயுள்ள பாசல் 11 மூலதனத் தேவைக் கட்டமைப்புக்கு ஏற்புடையதான அனைத்து முன்தேவைப்பாடுகளும் ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்டன. இணங்கியொழுகும் அடிப்படையில் மேற்பார்வை செய்யப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கியல்லாத நிதி நிறுவனங்களை, இடர்நேர்வு அடிப்படையில் மேற்பார்வை செய்கின்ற போக்கொன்றும் ஆண்டினுள் நடைபெற்றது. வங்கிகளின் பொருட்டு, மத்திய வங்கியினால் அமைப்பு ரீதியிலான நல்லாட்சி பற்றிய வழிகாட்டல்களும், பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் பொருட்டு, பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக் குழுவினால் நல்லாட்சி பற்றிய கட்டாய நன்னடத்தை முறைமையொன்றும் வெளியிடப்பட்டது. பணத் தூய்தாக்கலுக்கு எதிராக மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மேலும் பலப்படுத்தப்பட்டன. இதற்கு இணங்க, "வாடிக்கையாளர் தொடர்பாக மிகக் கவனமான விதத்தில் விடயங்களைக் கண்டறியும் தேவைப்பாடு" மற்றும் "உங்களது வாடிக்கையாளரை அடையாளம்காணல்" ஆகிய விடயங்களின் கீழ் வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டன. இதைத் தவிர, நிதியியல் முறைமைக்கு உதவியாயமையக்கூடிய சட்டக் கட்டமைப்பு 2007 ஆம் ஆண்டில் இற்றைப்படுத்தப்பட்டு பலப்படுத்தப்பட்டது.

ஆண்டினுள் உள்நாட்டு நிதிச் சந்தை உயர் மாற்றமுறும் இயல்பினைக் காட்டிய போதிலும், நிதியியல் பணிகள் துறை 8.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. நிதி நிறுவனங்களின் மொத்தச் சொத்துக்கள் ரூபா 4,323 பில்லியன் வரை 16 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் போன்று 1.21 மடங்காகும். கொழும்பு பங்குச் சந்தை மற்றும் உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை ஆண்டினுள் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உள்ளாகியது. வங்கிகளுக்கு இடையிலான அழைப்புப் பணச் சந்தையின் அளவு 2006 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்ததோடு, அரச பிணை ஆவணங்கள் சந்தை 2007 ஆம் ஆண்டில் மேலும் தளர்த்தப்பட்டது.

திறைசேரி முறிகளிலான வெளிநாட்டு முதலீடு 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டது. மேலும், ஆண்டினுள் வழங்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் முதலாவது இறைமை முறிகள் ஏலவிற்பனையில் நிலவிய அதிக பங்களிப்பு, வெளிநாட்டு நிதிச் சந்தைகளில் இலங்கை பின் பொருளாதாரம் தொடர்பாக உள்ள நம்பிக்கையை சிறந்த முறையில் பிரதிபலிக்கச் செய்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டுத் துறை அபிவிருத்திகள்

திமுத்து சமரதுங்க

உதயந்தி தென்னகோன்

பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

2007 ஆம் ஆண்டில் அதிக காலம் உலகளாவிய பொருளாதாரம் சாதகமான நிலைமையில் இருந்ததன் காரணமாக, இலங்கையின் பொருளாதாரத்தின் வெளிநாட்டுத் துறை 2007 ஆம் ஆண்டில் பலம்பொருந்தியதாக இருந்தது. குறிப்பாக இறக்குமதியைத் தாண்டிய விதத்தில் ஏற்றுமதி வளர்ச்சியடைந்ததன் மூலம் சென்மதி நிலுவையில் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையும் மிகையொன்று அறிக்கையிடப்பட்டமை, 2007 ஆம் ஆண்டில் பொருளாதாரத்தில் நடைபெற்ற குறிப்பிடத்தக்கதொரு வளர்ச்சியாக இருந்தது.

ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயற்பாடு

பண்டங்கள் மற்றும் பணிகள் வர்த்தகத்தை வளர்க்கும் நோக்கத்துடன் இலங்கையின் வெளிநாட்டுத் துறை மேலும் தளர்த்தப்பட்ட பொருளாதாரச் சுற்றாடலினுள், அதன் பிரதானமான வர்த்தகப் பங்குதாரர்களுடன் பொருளாதார ஒத்துழைப்புடன் செயற்பட்டது. முழுமையான திறந்த தன்மையுடன் கூடியதான நடைமுறைக் கணக்கும், சுதந்திரமாக மிதக்கவிடப்பட்ட செலாவணி வீதமும் அதேபோன்று மென்மேலும் திறந்துவிடப்பட்ட மூலதனக் கணக்கும் வெளிநாட்டுத் துறையில் சாதகமானதொரு வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு உதவியாயமைந்தது. உற்பத்திகளின் சேர் பெறுமதியினை அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதி வருவாயை உயர்த்துதலும், அதன் பிரதிபலன்களை பிரதேச பொருளாதார அபிவிருத்தியின் ஊடாக குறைந்த வருமான மட்டங்களை நோக்கி

அட்டவணை 1

சென்மதி நிலுவைப் பகுப்பாய்வு வெளிப்படுத்துகை (அ)

ஐ.அ.டொலர் மில்லியன்

விடயம்	2003	2004	2005	2006	2007(ஆ)
வர்த்தக நிலுவை	-1,539	-2,243	-2,516	-3,370	-3,560
ஏற்றுமதிகள்	5,133	5,757	6,347	6,883	7,740
இறக்குமதிகள்	6,672	8,000	8,863	10,253	11,301
பணிகள் (தேறிய)	399	419	338	257	239
பெறுகைகள்	1,411	1,527	1,540	1,625	1,711
கொடுப்பனவுகள்	1,012	1,108	1,202	1,368	1,473
வருமானம் (தேறிய)	-172	-204	-299	-389	-358
பெறுகைகள்	170	157	35	311	449
கொடுப்பனவுகள்	341	360	335	700	807
பொருட்கள் பணிகள் மற்றும் வருமானம் (தேறிய)	-1,312	-2,028	-2,478	-3,503	-3,679
தனியார் மாற்றல்கள் (தேறிய)	1,205	1,350	1,736	1,904	2,214
பெறுகைகள்	1,414	1,564	1,968	2,161	2,502
கொடுப்பனவுகள்	209	214	233	257	288
அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய)	36	30	93	101	97
நடைமுறைக் கணக்கு	-71	-648	-650	-1,499	-1,369
மூலதன மற்றும் நிதியியல் கணக்குகள்	722	631	1,224	1,808	2,097
மூலதன கணக்கு	74	64	250	291	269
மூலதன மாற்றல்கள் (தேறிய)	74	64	250	291	269
பெறுகைகள்	81	71	257	299	278
கொடுப்பனவுகள்	6	7	7	8	10
நிதியியல் கணக்கு	648	567	974	1,517	1,828
நீண்டகால	722	680	798	907	1,251
நேரடி முதலீடு (தேறிய)	201	227	234	451	548
வெளிநாட்டு நேரடி முதலீடு (தேறிய)	171	217	234	451	548
தனியார்மயமாக்கல் பெறுகைகள்	30	10	-	-	-
தனியார் நீண்டகால (தேறிய)	-33	14	11	35	31
பெறுகைகள்	101	169	197	139	199
கொடுப்பனவுகள்	134	155	186	174	168
அரச நீண்டகால தேறிய	554	439	553	491	672
பெறுகைகள்	913	771	747	932	1,290
கொடுப்பனவுகள்	359	331	194	441	618
குறுங்காலம்	-75	-112	176	610	577
பல்வகை முதலீடு (தேறிய)	2	11	60	51	101
தனியார் குறுங்கால (தேறிய)	19	28	16	-30	20
வர்த்தக வங்கிச் சொத்துக்கள் (தேறிய)	-94	-354	-223	297	-281
வர்த்தக வங்கிப் பொறுப்பகள் (தேறிய)	-2	202	323	293	364
அரச குறுங்கால (தேறிய)	-	-	-	-	372
பிழைகளும் தவறுகளும்	148	189	72	105	-198
திரண்ட நிலுவை	502	-205	501	204	531
நாணய அசைவுகள்	-502	205	-501	-204	-531
மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வர்த்தகக் கணக்கு	-8.1	-10.9	-10.3	-11.9	-11.0
நடைமுறைக் கணக்கு (இ)	-0.4	-3.1	-2.7	-5.3	-4.2
கொடைகளற்ற நடைமுறைக் கணக்கு	-0.6	-3.3	-3.0	-5.7	-4.5

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) மேற்படி புள்ளிவிபரங்கள் சென்மதி நிலுவைக் கைநூலின் 5 வது பதிப்புக்கு (1993) ஏற்ப பன்னாட்டு நாணய நிதியத்தினால் சர்வதேச ரீதியில் கடைப்பிடிக்கப்படுகின்ற விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர 1994 இல் இருந்து கரைகடந்த வங்கிக் கூறுகளும் உள்நாட்டு வங்கி முறையின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டுள்ளது.

(ஆ) தற்காலிகமானவை

(இ) 2003 ஆம் ஆண்டிலிருந்து மொ.உ.உ. யுடன் தொடர்புடைய தரவுகள் தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் கணிப்பிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்த்துதலுமே அரசாங்கத்தின் ஏற்றுமதிக் கொள்கையின் எதிர்பார்ப்பாக இருந்தது. தீவிரமான சர்வதேச போட்டி நிலைகளுக்கு மத்தியில்கூட ஏற்றுமதி தொடர்ந்தும் உயர் வளர்ச்சியினைக் காட்டியது. குறிப்பாக வர்த்தக முன்னுரிமைகள் தொடர்பான பொது முறையின் (GSP+) கீழ் ஐரோப்பிய சங்கத்தின் சந்தைகளில் பிரவேசிக்கின்ற இயலுமை அதிகரித்தமையின் காரணமாக அந்நாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகளில் அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. இந்திய - இலங்கை மற்றும் பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளின் வழிகாட்டல்களின் பிரகாரம் நாடுகளுக்கிடையே தொடர் வரிசைப்படி தீர்வை வரியை நீக்குதல் 2007 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. வெளிநாட்டு வர்த்தகத்தில் தீர்வை வரி தொடர்ந்தும் பிரதானமான வர்த்தகக் கொள்கை அளவீடாக இருந்ததோடு, 2004 இல் அறிமுகப்படுத்தப்பட்ட 0, 2.5, 6, 15 மற்றும் 28 சதவீதங்களைக் கொண்ட 5 பகுதிகளுடன் கூடியதான தீர்வை வரிக் கட்டமைப்பு 2007 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து அமுலிலிருந்தது.

2007 ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருமானம் ஐ.அ. டொலர் 7,740 மில்லியன் வரை 12.5 சதவீதத்தால் அதிகரித்தது. இதன் பொருட்டு ஒருசில முக்கியமான ஏற்றுமதிப் பிரிவுகளின் ஏற்றுமதி விலைகளும் ஏற்றுமதி அளவுகளும் அதிகரித்தமை முக்கியமாக ஏதுவாயமைந்தது.

2007 ம் ஆண்டில் கைத்தொழில் ஏற்றுமதி 9.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்ததோடு, இதன் பொருட்டு, பன்னாட்டுச் சந்தையில் வளர்ச்சியடைந்து வருகின்ற போட்டி நிலைக்கு முகம் கொடுப்பதற்காக ஏற்றுமதியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முயற்சியும், இலங்கை அதன் வர்த்தகப் பங்காளர் நாடுகளுடன் செய்துகொண்ட வர்த்தக உடன்படிக்கைகளும், எமது ஏற்றுமதிகளைக் கொள்வனவு செய்கின்ற பிரதானமான நாடுகளில் நிலவிய திருப்திகரமான பொருளாதாரச் சூழ்நிலையும் காரணமாயிருந்தன. கைத்தொழில் ஏற்றுமதிப் பிரிவைச் சேர்ந்த புடவைகள் மற்றும் ஆடைகள் உப துறை மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 43 சதவீதத்திற்குப் பங்களிப்புச் செய்ததோடு, ஐ.அ. டொலர் 3,342 வருவாயுடன் கூடியதாக, இது தொடர்ந்தும் இலங்கையின் முதன்மையான வெளிநாட்டுச் செலாவணி ஈட்டும் மூலமாக விளங்கியது. இதன் பொருட்டு ஐக்கிய அமெரிக்காவுக்கும் மற்றும் GSP+ இன் கீழ் கிடைத்துள்ள சலுகைகளின் ஊடாக ஐரோப்பிய சங்கத்தின் நாடுகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதிகள் பெருமளவு பங்களிப்புச் செய்தன.

2007 ஆம் ஆண்டில் 16.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த கமத்தொழில் ஏற்றுமதிகளின் பிரதானமான பங்களிப்பு, ஐ.அ.டொலர் 1,025 மில்லியன் ஏற்றுமதி வருவாயை ஈட்டித்தந்த தேயிலை ஏற்றுமதித் துறைக்கு உரியதாயிருந்தது. 2007 ஆம் ஆண்டில் இலங்கையில் தேயிலை ஏற்றுமதி வருவாய் வரலாற்றில் முதற் தடவையாக ஐ.அ.டொலர் 1 பில்லியன் எல்லையைத் தாண்டிச் சென்றது. இலங்கையின் தேயிலை ஏற்றுமதியின் அளவு 2007 இல் குறைவடைந்த போதிலும், வெளிநாட்டுச் சந்தையில் தேயிலைக்குக் கிடைத்த உயர் விலைகளின் காரணமாக ஏற்றுமதி வருவாய் சென்ற வருடத்தை விட அதிகரித்தது. எண்ணெய் விலை அதிகரிப்புக்கு நேரொத்த விதத்தில் இலங்கையின் தேயிலையைக் கொள்வனவு செய்கின்ற பிரதானமான நாடுகளின் வருமானம் அதிகரித்தமை மற்றும் இலங்கையின் தேயிலைக்குரிய விசேடமான பண்புகள் இலங்கையின் தேயிலைக்கு அதிகளவு கேள்வி உருவாவதற்குக் காரணமாயிருந்தன.

2007 இல் இறப்பர் ஏற்றுமதியும் மேலும் வளர்ச்சியடைந்தது. உலக சந்தையில் சாதனை படைத்த மசகெண்ணெய் விலையைத் தொடர்ந்து அதிகரித்த செயற்கை இறப்பரின் விலை, இயற்கை இறப்பரின் விலை மேலும் அதிகரிப்பதற்கு காரணமாயமைந்தது. அதேபோன்று சர்வதேச ரீதியில் உயிர் எரிபொருள் உற்பத்திக்கு தேங்காய் எண்ணெய் பயன்படுத்தப்பட்டமையால் 2007 ஆம் ஆண்டில் தேங்காய் மற்றும் தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதி விலைகள் அதிகரித்தமை இப் பிரிவுக்குரிய ஏற்றுமதி வருவாய் அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்தது.

2007 ஆம் ஆண்டில் இறக்குமதி 10.2 சதவீதத்தால், ஐ.அ.டொலர் 11,300.5 மில்லியன் வரை அதிகரித்தது. நுகர்வுப் பண்டங்களின் இறக்குமதிச் செலவு 1 சதவீதமளவு குறைந்த பெறுமானத்தில் வளர்ச்சியடைந்தமை, இறக்குமதிச் செலவுகளின் வளர்ச்சியை நடுத்தர மட்டத்தில் பேணிவருவதற்குக் காரணமாக இருந்தது. முழுமொத்த இறக்குமதியில் 40.7 சதவீதத்தால் பங்களிப்புச் செய்த பெற்றோலிய இடைநிலைப் பண்டங்கள், இறக்குமதிச் செலவு 9.2 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு பிரதானமாக ஏதவாயிருந்தது. சர்வதேச ரீதியில் பெற்றோலிய விலைகள் அதிகரித்தமை பெற்றோலியத்துக்கான இறக்குமதிச் செலவு அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தது. கடந்த வருடங்களில் நிலவிய போக்கைத் தொடர்ந்தும் காட்டுகின்ற வகையில் 2007 ஆம் ஆண்டிலும் முதலீட்டுப் பண்டங்களின் இறக்குமதிச் செலவு 19.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தமையை இலங்கையின் இறக்குமதித் துறையில் நடைபெற்ற சாதகமானதொரு போக்காகச் சுட்டிக்காட்டலாம். முதலீட்டுப் பண்டங்களின் இறக்குமதிச் செலவுகள் அதிகரிப்பதில், அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட துரித அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் கட்டிடவாக்கம், தொடர்பூட்டல், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் தனியார் துறையினால் அமுலாக்கப்பட்ட கருத்திட்டங்கள் பங்களிப்புச் செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 2

ஏற்றுமதி உள்ளமைப்பு

ஐ. அ. டொலர் மில்லியன்

வகைகள்	1998	1999	2000	2001	2002	2003	2004	2005	2006	2007 (அ)
1. கமத்தொழில் ஏற்றுமதிகள்	1,088	947	1,005	932	938	965	1,065	1,154	1,293	1,507
தேயிலை	780	621	700	690	660	683	739	810	881	1,025
இறப்பர்	44	33	29	24	27	39	51	47	93	109
தெங்கு	94	129	121	82	84	93	113	113	124	141
உள்ளீட்டு உற்பத்திகள்	56	84	77	41	41	48	59	49	53	60
ஏனையவை	38	45	45	42	42	45	54	65	71	81
சிறு கமத்தொழில் உற்பத்திகள்	170	165	155	136	168	150	162	183	195	232
2. கைத்தொழில் ஏற்றுமதிகள்	3,607	3,551	4,283	3,710	3,631	3,977	4,506	4,948	5,401	5,921
உணவு, குடிபானங்கள், புகையிலை	118	86	152	128	123	145	175	318	364	514
புடவைகளும் ஆடைகளும்	2,460	2,425	2,982	2,543	2,424	2,575	2,809	2,895	3,080	3,342
பெற்றோலிய உற்பத்திகள்	73	74	98	68	73	65	100	131	188	169
இறப்பர் உற்பத்திகள்	178	161	196	172	182	231	283	394	428	482
பீங்கான் உற்பத்திகள்	54	49	47	42	42	42	47	47	47	47
தோல், பயணப்பொருட்கள், காலணிகள்	214	201	176	150	84	58	4,338	44	41	24
இயந்திரப் பொறிகள், உபகரணங்கள்	182	201	244	245	266	290	6	330	394	542
வைரம் மற்றும் ஆபரணம்	131	171	192	185	205	233	265	278	327	368
ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள்	197	184	197	177	231	337	398	512	532	434
3. கனிப்பொருள் ஏற்றுமதிகள்	60	64	97	86	90	84	120	143	120	129
இரத்தினக் கற்கள்	56	61	93	82	86	79	109	120	103	107
ஏனையவை	4	3	3	4	5	5	11	23	17	22
4. வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகள்	43	48	137	88	41	108	66	101	69	184
மொத்த ஏற்றுமதிகள் (இ)	4,798	4,610	5,522	4,817	4,699	5,133	5,757	6,347	6,883	7,741

மூலம்: இலங்கை சுங்கம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலியப் பொருட்கள் ஏற்றுமதியாளர்கள்
தேசிய இரத்தினக் கற்கள் ஆபரணங்கள் அதிகார சபை
இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை
(ஆ) இலங்கை சுங்கத்தினால் வழங்கப்பட்ட வைரம் ஏற்றுமதி தொடர்பிலான தரவுகள் 1999 இல் இருந்து தேசிய இரத்தினக் கற்கள் ஆபரணங்கள் அதிகார சபையில் இருந்து பெறப்பட்ட தரவுகளுக்கு சீர்செய்யப்பட்டது.
(இ) மீள் ஏற்றுமதிகள் உள்ளடங்கியுள்ளது.
(ஈ) சீர்செய்யப்பட்ட

2007 ம் ஆண்டில் இறக்குமதிச் செலவின் வளர்ச்சியைத் தாண்டிச் சென்ற ஏற்றுமதி வருவாய்களின் வளர்ச்சி வர்த்தக நிலுவையின் விரிவாக்கத்தினை மட்டுப்படுத்துவதற்கு உதவியாயிருந்தது. 2006 ஆம் ஆண்டில் ஐ.அ. டொலர் 3,371 மில்லியனாக இருந்த முழுமொத்த வர்த்தக நிலுவை 2007 ஆம் ஆண்டில் ஐ.அ. டொலர் 3,560 மில்லியன் வரை விரிவடைந்தது. 2007 ஆம் ஆண்டிலும் வர்த்தக வீதம் வீழ்ச்சியடைந்த போதிலும், கமத்தொழில் ஏற்றுமதிகளின் அதிகரித்த விலைகள் மேற்படி வீழ்ச்சியைக் குறைப்பதற்குப் பங்களிப்புச் செய்தன. இலங்கையின் ஏற்றுமதியில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை தொடர்ந்தும் ஒருசில மேலைத்தேய நாடுகளுக்கு அனுப்பப்படுவதோடு, இறக்குமதியில் ஏறத்தாழ 63 சதவீதமானவை ஆசிய நாடுகளிலிருந்து நடைபெறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை 3

இறக்குமதிகளின் இறுதிப் பயன்பாட்டின்படியான பகுப்பு

வகை	ஐ.அ. டொலர் மில்லியன்									
	1998	1999	2000	2001	2002	2003	2004	2005	2006	2007(அ)
1. நுகர்வுப் பொருட்கள்	1,255	1,242	1,388	1,235	1,319	1,481	1,623	1,644	1,980	2,002
உணவும் குடிபானங்களும்	723	661	693	654	696	701	779	753	956	1,065
அரிசி	42	46	4	11	18	8	59	16	6	39
சீனி	129	106	141	115	132	116	111	132	224	154
கோதுமை	127	111	127	110	130	137	183	141	199	234
ஏனையவை	425	398	421	419	415	440	425	463	528	638
ஏனைய நுகர்வுப் பொருட்கள்	532	581	696	581	623	780	844	891	1,024	937
2. இடைநிலைப் பொருட்கள்	2,982	3,057	3,789	3,321	3,492	3,811	4,645	5,317	5,962	6,513
பெற்றோலியம்	345	500	901	731	789	838	1,209	1,655	2,070	2,497
வளமாக்கி	62	66	80	67	76	88	107	135	164	193
இரசாயனங்கள்	143	136	147	142	155	170	206	249	261	281
ஆடைகளும் புடவைகளும்	1,397	1,320	1,471	1,320	1,321	1,372	1,514	1,531	1,546	1,632
ஏனைய இடைநிலைப் பொருட்கள் (ஆ)	1,035	1,035	1,190	1,061	1,151	1,343	1,609	1,747	1,921	1,911
3. முதலீட்டுப் பொருட்கள்	1,477	1,565	1,737	1,081	1,170	1,320	1,670	1,870	2,246	2,685
பொறியும் கருவியும்	786	678	787	610	640	698	857	860	1,065	1,247
போக்குவரத்துக் கருவி (இ)	264	523	529	129	151	206	257	325	365	365
கட்டடப் பொருட்கள்	303	260	305	249	272	328	402	507	546	780
ஏனைய முதலீட்டுப் பொருட்கள்	124	105	116	93	108	88	154	177	270	294
4. பகுக்கப்படாத இறக்குமதிகள்	176	115	406	337	125	60	61	33	65	100
மொத்த இறக்குமதிகள் (ஈ)	**5,890**	**5,980**	**7,320**	**5,974**	**6,105**	**6,672**	**8,000**	**8,863**	**10,254**	**11,301**

மூலம்: இலங்கை சுங்கம்
கூட்டுறவு மொத்த விற்பனை கூட்டுத்தாபனம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
பிரதானமான வைர இறக்குமதியாளர்கள்
வரையறுக்கப்பட்ட பிரீமா லங்கா கம்பனி

(அ) தற்காலிகமானவை

(ஆ) இலங்கை சுங்கத்தினால் வழங்கப்பட்ட வைரம் ஏற்றுமதி தொடர்பிலான தரவுகள் 1999 இல் இருந்து 2000 ஆம் ஆண்டு வரையிலும் பிரதானமான வைர இறக்குமதியாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தரவுகளுக்கு சீர்செய்யப்பட்டது.

(இ) 1999 மற்றும் 2000 இல் ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனியால் இறக்குமதி செய்யப்பட்ட மூன்று விமானங்கள் வீதம் உள்ளடங்கியுள்ளது.

(ஈ) சீர்செய்யப்பட்டது.

சுற்றுலாக் கைத்தொழில்

2007 ஆம் ஆண்டில் சுற்றுலாக் கைத்தொழிலில் பின்னடைவு அறிக்கையிடப்பட்டது. 2006 ஆம் ஆண்டில் 559,603 ஆக இருந்த சுற்றுலாப் பயணிகளின் வருகை 2007 ஆம் ஆண்டில் 494,008 வரை 11.7 சதவீதத்தால் குறைவடைந்தது. பிரதானமாக சுற்றுலாப் பயணிகள் வருகின்ற நாடுகளிலிருந்து, அதாவது ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, அவுஸ்திரேலியா, இத்தாலி மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளால் வழங்கப்பட்ட பாதகமான சுற்றுலா அறிவுரைகள் மற்றும் நாட்டில் நிலவிய பாதுகாப்பு நிலைமைகளும் மேற்படி கைத்தொழிலின் வளர்ச்சியில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியது. சுற்றுலாப் பிரயாணிகள் வருகை குறைவடைந்ததன் பெறுபேறாக 2006 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 410 மில்லியனாக இருந்த சுற்றுலாத் துறை வருவாய் 2007 ஆம் ஆண்டில் ஐ.அ. டொலர் 385 மில்லியன் வரை குறைவடைந்தது. 2007 ஆம் ஆண்டில் சுற்றுத் துறையின் மேம்பாட்டுக்கும் கைத்தொழிலுக்கும் உதவும் பொருட்டு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சுற்றுலாக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தொழிலுக்கு உதவியளிப்பதைக் காட்டும் பொருட்டு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளில், 2006 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் விதிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 10 வீசாக் கட்டணம் ஒத்திவைக்கப்பட்டமை, சுற்றுலாத்துறையின் பொருட்டு பெறுமதி சேர் வரி செலுத்துதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை, பெறுமதி சேர் வரியை தாமதித்துச் செலுத்துதல் தொடர்பிலான அபராதத் தொகை இடைநிறுத்தப்பட்டமை மற்றும் மூலதனக் கொடுப்பனவுகளுக்கு சலுகை வழங்குதல் ஆகிய சலுகைகள் உள்ளடங்குகின்றன. 2007 ஆம் ஆண்டின் ஒக்றோபர் மாதம் முதலாந் திகதியில் இருந்து அமுலாகின்றவாறு, 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறைச் சட்டம் அறிமுகப்படுத்தப் பட்டமையை இவ்வாண்டில் நடைபெற்ற முக்கியமான நிகழ்வாகக் குறிப்பிடலாம்.

பணிகளிலான வர்த்தகம், வருமானம், மாற்றல்கள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை

பணிகளிலான வர்த்தகம்

கப்பல் கட்டணங்கள், துறைமுக பணிகள் மற்றும் பயணிகள் கட்டணங்களுடன் கூடிய மொத்தப் போக்குவரத்துச் சேவை வருவாய் 2007 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 840 மில்லியன் வரை 11.9 சதவீதத்தால் அதிகரித்தது. கப்பல் சரக்குக் கையாளுகையின் கொள்ளளவு அதிகரித்தமையின் காரணமாக துறைமுகப் பணிகள் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியடைந்தமை, தேசிய விமானச் சேவையின் விமானப் பயண முடிவிடம் விரிவாக்கப்பட்டமை, விமானப் பயணக் காலம் மற்றும் விமானப் பயணத் தடவைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டமை மற்றும் மிஹின் லங்கா என்ற பெயரில் புதியதொரு விமானச் சேவை ஆரம்பிக்கப்பட்டமையினால் பயணிகள் கட்டண வருமானம் அதிகரித்தமை ஆகியன காரணமாக போக்குவரத்துச் சேவைப் பெறுகைகள் அதிகரித்தன.

கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன் கையாளுகைகள் அதிகரித்தமையும், இந்தியாவின் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகள் விரிவடைந்தமை மற்றும் தொடர்ச்சியான உயர் பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு கொள்கலன்களை மீளக் கப்பலேற்றுதல் அதிகரித்தமையினாலும் துறைமுகப் பணிகளிலான வருவாய் அதிகரித்தது. அதேநேரம் உயர் இறக்குமதி வளர்ச்சியைப் போன்றே பொழுதுபோக்கு, தொழில், கல்வி மற்றும் சுகாதாரக் காரணங்களுக்காக வெளிநாட்டுக்குச் செல்கின்ற இலங்கையர்களின் எண்ணிக்கை அதிகரித்தமையின் காரணத்தினால் போக்குவரத்துப் பணிக் கொடுப்பனவுகளும் 10.6 சதவீதத்தால் அதிகரித்தது.

இணையம் மற்றும் மின்அஞ்சல் பயன்பாட்டைப் போன்றே சர்வதேச நேரடியான தொலைபேசி அழைப்புகள் அதிகரித்த போதிலும், 2007 ஆம் ஆண்டில் தொலைத் தொடர்புப் பணிகளின் மூலம் கிடைத்த தேறிய வருவாய் 4.3 சதவீதத்தால் குறைவடைந்தது. கணனி மென்பொருள்கள் மற்றும் தொழிற்துறைச் செயற்பாடுகள் வெளிவாரி மூலங்களுக்கு ஒப்படைக்கப்பட்டமை (BPO), அறிவை அடிப்படையாகக் கொண்ட தொழிற்துறைச் செயற்பாடுகள் வெளிவாரி மூலங்களுக்கு ஒப்படைக்கப்பட்டமை (KPO) உட்பட தகவல் தொழில்நுட்பப் பணிகளின் ஏற்றுமதிகள் 2007 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக அதிகரித்தன.

வருமானத்தின் உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும்

2007 ஆம் ஆண்டில் அலுவல்சார் ஒதுக்கு முதலீட்டு வருமானம் அதிகரித்தமையின் காரணமாக வருமானக் கணக்கின் மொத்த வருவாய்கள் ஐ.அ. டொலர் 449 மில்லியன் வரை 44 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமை, விரிவடைந்து வந்த வருமானக் கணக்கின் நிலுவையை மட்டுப்படுத்துவதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. ஆண்டினுள் அதிகரித்துச் சென்ற உலகளாவிய வட்டி வீதங்கள் மற்றும் அலுவல்சார் ஒதுக்குகள் தொடர்ந்து அதிகரித்தமையின் காரணமாக 2007 இல் அலுவல்சார் ஒதுக்கு முதலீடுகளிலிருந்து பெற்ற வட்டி வருமானம் ஐ.அ.டொலர் 105 மில்லியன் வரை 44 சதவீதத்தால் அதிகரித்தது. இதைத் தவிர 2007 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் ஏனைய பிரதானமான நாணய வகைகளான யூரோ, ஸ்டர்லின் பவுண் மற்றும் யப்பான் யென் ஆகியவற்றிற்கு எதிராக தேய்வடைந்தமையின் காரணமாக, அப்போதைக்குள்ள வர்த்தகப் பெறுமதியின்படி மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு ஒதுக்குகள், ஐ.அ.டொலர் பெறுமதியில் காட்டப்படுகின்றபோது, குறிப்பிடத்தக்கதொரு அனுகூலத்தைப் பெற்றுத் தந்தது. 2007 ஆம் ஆண்டில் நிலவிய உயர் உலகளாவிய வட்டிவீதத்தின் காரணமாக, வர்த்தக வங்கிகள் உட்பட தனியார் துறையின் வெளிநாட்டு நிதிச் சொத்துக்களிலான வருவாய்களும் அதிகரித்தன. 2005 ஆம் ஆண்டில் சுனாமி அனர்த்தத்தின் காரணமாக கடன் செலுத்துதலைத் தாமதித்தல் முடிவடைந்தமை மற்றும் முன்னர் பெறப்பட்ட கடன்களின் திரட்சி அதிகரித்தமையினால் வெளிநாட்டுக் கடன்கள் மீது செலுத்தப்படுகின்ற வட்டிக் கொடுப்பனவுகள் 2007 ஆம் ஆண்டிலும் அதிகரித்தன. இதன் விளைவாக 2007 ஆம் ஆண்டில் வருமானக் கணக்கில் கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 807 மில்லியன் வரை ஏறத்தாழ 15 சதவீதத்தால் அதிகரித்தது. அப்போதிருந்த தொழிற்பாடுகளை மேலும் விரிவாக்கும் பொருட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த இலாபத்தை மீண்டும் முதலீடு செய்தல் உட்பட, வெளிநாட்டு முதலீட்டாளர்களின் இலாபங்கள் தமது நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுதலும் ஆண்டினுள் குறிப்பிடத்தக்க விதத்தில் அதிகரித்தது.

நடைமுறை மாற்றல்கள்

2007 ஆம் ஆண்டில் வெளிநாட்டுத் தொழில்புரிவோரின் பண அனுப்பல்கள் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டிலும் மிக அதிக வேகத்தில் வளர்ச்சியடைந்து ஐ.அ.டொலர் 2,502 மில்லியனை அடைந்தது. இவ்வதிகரிப்புக்கு, 2007 ஆம் ஆண்டில் வெளிநாட்டுத் தொழில்புரிவதற்காக வெளியேறியவர்கள் 8 சதவீதத்தால் அதிகரித்தமை, எண்ணெய் உற்பத்தி நாடுகளின் வருமானம் அதிகரித்தமையின் ஊடாக மத்திய கிழக்குப் பிராந்திய நாடுகளில் சராசரிச் சம்பளம் அதிகரித்தமை மற்றும் கொரியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய அதிக சம்பளம் வழங்குகின்ற நாடுகளுக்கு வெளியேறிச் சென்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை ஆகியன முக்கியமான காரணங்களாக அமைந்தன. 2007 ஆம் ஆண்டில் வளர்ச்சியடைந்த வெளிநாட்டுத் தொழில்புரிவோர்களின் பண அனுப்பல்கள், வர்த்தகக் கணக்கு பற்றாக்குறையில் 70 சதவீதத்தினை நிதியிடுவதற்குப் போதியதாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைக் கணக்கு மீதி

நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2006 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ஐ.அ.டொலர் 1,499 மில்லியனிலிருந்து 2007 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1,369 மில்லியன் வரை சிறிதளவு சுருங்கியது. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நோக்குகின்றவிடத்து 2006 ஆம் ஆண்டில் இருந்த 5.3 சதவீதத்திலிருந்து 2007 ஆம் ஆண்டில் 4.2 சதவீதமாக குறைவடைந்தது. நடைமுறைக் கணக்கு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி விகிதத்தின் மீது உயர்ந்தளவிலான சர்வதேசப் பண்டங்களின் விலைகள் ஏற்படுத்திய பாதகமான தாக்கத்தை தணிப்பதற்கு மற்றும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை குறைப்பதற்கு வெளிநாட்டுத் தொழில்புரிவோர்களின் பண அனுப்பல்கள் அதிகரித்தமை உதவியாயமைந்தது. விரிவடைந்து செல்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் மூலம் நாட்டின் முதலீட்டு சேமிப்பு இடைவெளி பிரதிபலிக்கப்படுவதோடு, பொருளாதார வளர்ச்சி வேகத்தை 7-8 சதவீத மட்டத்தில் பேணி வருவதற்குத் தேவையான முதலீட்டுச் செலவுகளின் பொருட்டு வெளிநாட்டு மூலதனத்தை ஈர்க்கின்ற தேவை இதன் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மூலதன மற்றும் நிதிப் பாய்ச்சலும் சென்மதி நிலுவையும்

வெளிநாட்டு நேரடி முதலீடு

இதுவரை அறிக்கையிடப்பட்ட அதிஉயர் நேரடி முதலீட்டுப் பெறுகைகள் 2007 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டதோடு, இது ஐ.அ.டொலர் 734 மில்லியனாக இருந்தது. இதன் பொருட்டு பிரதானமாக, முதலீட்டுச் சபையின் கீழுள்ள, குறிப்பாக பணிகள் துறை தொழில்முயற்சிகளின் வருவாயை மீண்டும் முதலீடு செய்தல் துரிதமாக அதிகரித்தமை காரணமாயிருந்தது.

அரசிற்கான கடன் மூலதனம் - நடுத்தர மற்றும் நீண்டகாலம்

முதலாவது இறைமை முறி வழங்குதல் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடன்கள் மற்றும் கொடைகளை உள்ளடக்கியதான அரசிற்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் 2007 ஆம் ஆண்டிலும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. 2006 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ஐ.அ.டொலர் 1.2 பில்லியனுடன் ஒப்பிடுகின்ற போது 2007 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1.6 பில்லியன் பெறுமதியான கடன்களையும் கொடைகளையும் திரட்டுவதற்கு அரசிற்கு இயலுமாயிருந்தது. 2006 ஆம் ஆண்டில் இருந்த ஐ.அ.டொலர் 932 மில்லியனோடு ஒப்பிடுகின்றபோது 2007 ஆம் ஆண்டில் இறைமை முறிகள் நிதியம் உள்ளடங்கலாக மொத்த நீண்டகால மற்றும் நடுத்தரகால கடன் பெறுகைகள் ஐ.அ.டொலர் 1,290 மில்லியன் வரை அதிகரித்தன. இவ்வாண்டில் கிடைத்த மொத்த கடனில் 51 சதவீதம் சலுகை நிபந்தனைகளின் கீழும் எஞ்சிய 49 சதவீதம் வர்த்தக நிபந்தனைகளின் கீழும் கிடைத்தன. இதற்கிடையே சுனாமி அனர்த்தத்தின் காரணமாக பாரிஸ் கழக (Paris Club) உறுப்பினர்கள் 2005 ஆம் ஆண்டில் வழங்கிய 7 தவணைகளில் மீள் கொடுப்பனவு செய்ய வேண்டிய கடன் வசதிகளில் 2 தவணைகள் மீள் கொடுப்பனவு செய்யப்பட்டமையின் காரணமாக அரச கடன் மீள் கொடுப்பனவுகள் 2007 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 618 மில்லியன் வரை 40 சதவீதத்தால் அதிகரித்தன.

அரசிற்கான கடன் மூலதனம் - குறுகியகாலம்

முதற் தடவையாக 2006 நவெம்பர் 01 ஆம் திகதியிலிருந்து தீர்க்கப்படாத திறைசேரி முறிகளின் பெறுமதியில் கூடியபட்சம் 5 சதவீதம் வரை முதலீடு செய்வதற்கு அரசாங்கம் வெளிநாட்டவர்களுக்கு அனுமதி வழங்கியதோடு, 2007 திசெம்பர் மாதத்தில் மேற்படி எல்லை 10 சதவீதம் வரை மேலும் அதிகரிக்கப்பட்டது. இதன் காரணமாக 2007 ஆம் ஆண்டில் வெளிநாட்டவர்கள் அரச திறைசேரி முறிகளில் முதலீடு செய்தல் அதிகரித்ததோடு, மொத்த தேறிய குறுகியகால மூலதன உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 373 மில்லியனாக அறிக்கையிடப் பட்டிருந்தது.

தனியார் துறைக்கான கடன் மூலதனம்

2007 ஆம் ஆண்டில் தனியார் துறைக்கான வெளிநாட்டுக் கடன்கள் அதிகரித்தன. முக்கியமாக தனியார் துறையின், குறிப்பாக முதலீட்டுச் சபையின் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களின் கடன் பெறுகைகள் அதிகரித்தமையின் காரணமாக தனியார் துறைக்கான நீண்டகாலக் கடன்கள் 2007 இல் ஐ.அ. டொலர் 199 மில்லியன் வரை 43 சதவீதத்தால் அதிகரித்தன. 2007 ஆம் ஆண்டில் உள்நாட்டு வட்டி வீதம் அதிகரித்தமையின் காரணமாக ஒருசில தனியார் துறையின், குறிப்பாக தொலைத் தொடர்பூட்டல் மற்றும் நிதியியல் துறை நிறுவனங்கள் அவற்றின் தொழில்துறைகளை விரிவாக்கும் பொருட்டு வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுள்ளன.

வங்கி முறைமையிலிருந்து அரசு பெற்றுள்ள தேறிய கடன் பெறுகைகள் 2006 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ஐ.அ. டொலர் 394 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2007 ஆம் ஆண்டில் ஐ.அ. டொலர் 200 மில்லியனாக இருந்தது. இதற்கிடையே பங்குச் சந்தையில் பல்வேறு முதலீடுகளின் தேறிய பெறுகைகள் ஐ.அ. டொலர் 101 மில்லியன் வரை அதிகரித்தன.

சென்மதி நிலுவையும் வெளிநாட்டு ஒதுக்குகளும்

மூலதன மற்றும் நிதியியல் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள், நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு வேண்டிய அளவிற்கும் அதிகமாக இருந்தமையால், தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டிலும் முழுமொத்த சென்மதி நிலுவையில் மிகையொன்று அறிக்கையிடப்பட்டது. 2006 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ஐ.அ.டொலர் 204 மில்லியனுடன் ஒப்பிடுகின்றபோது முழுமொத்த சென்மதி நிலுவை மிகை 2007 ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 531 மில்லியன் வரை வளர்ச்சியடைந்தது. பன்னாட்டு இறைமை முறிகளை வழங்கியதன் மூலம் ஐ.அ. டொலர் 500 மில்லியன் கிடைத்தமை, மேற்படி அதிகரித்த மிகைக்கு முக்கியமாகப் பங்களிப்புச் செய்தது.

2007 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட சென்மதி நிலுவை மிகை, மொத்த அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குத் தொகை மேலும் வளர்ச்சியடைவதற்குக் காரணமாக அமைந்தது. ஆசிய தீர்ப்பனவுச் சங்கத்தின் பெறுகைகள் உள்ளடங்காத மொத்த அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குத் தொகை 2007 இல் ஐ.அ. டொலர் 3,063 மில்லியன் வரை அதிகரித்தது. 2007 ஆம் ஆண்டில் பெற்றோலியம் மற்றும் அத்தியாவசிய உணவுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களின் சர்வதேச விலைகள் அதிகரித்தமையினால் இறக்குமதிச் செலவு அதிகரித்த போதிலும், மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2006 இல் 3 மாத கால இறக்குமதிக்கு போதியதாயிருந்ததோடு, 2007 ஆம் ஆண்டில் இது 3.3 மாத கால இறக்குமதிக்குப் போதியதாயிருந்தது. எவ்வாறாயினும் வெளிநாட்டுச் சொத்துக்களின் போதுமாந்தன்மையை மொத்த அலுவல்சார் வெளிநாட்டுச் சொத்துக்கள், குறுகியகால கடன் மற்றும் பொறுப்புக்களின் சதவீதமாக நோக்குகின்றவிடத்து, 2006 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட 82 சதவீதத்திலிருந்து 2007 ஆம் ஆண்டில் 77 சதவீதம் வரை குறைவடைவதற்கு, குறுகியகாலக் கடன்கள் மற்றும் பொறுப்புகள் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமை காரணமாக இருந்தது. இதற்கிடையே வெளிநாட்டு நாணய வைப்புகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பைக் காட்டுகின்ற வகையில் வர்த்தக வங்கிகள் தமது வெளிநாட்டுச் சொத்துக்களை வளர்த்துக்கொண்டமையின் காரணமாக ஆசிய தீர்ப்பனவு சங்கத்தின் பெறுகைகள் உள்ளடங்காத நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குத் தொகை 2006 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட ஐ.அ. டொலர் 3,694 மில்லியனிலிருந்து 2007 ஆம் ஆண்டில் ஐ.அ. டொலர் 4,511 மில்லியன் வரை அதிகரித்தது.

வெளிநாட்டுப் படுகடனும் படுகடன் பணிகளும்

மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நாட்டின் மொத்தப் படுகடன் தொகை, 2006 ஆம் ஆண்டில் 43.2 சதவீதத்திலிருந்து 2007 ஆம் ஆண்டில் 44.1 சதவீதம் வரை அதிகரித்ததோடு, மொத்த வெளிநாட்டு படுகடன் தொகை ஐ.அ. டொலர் 14,252 மில்லியனாக இருந்தது. வெளிநாட்டுப் படுகடன்களில் அதிகளவு தொடர்ந்தும் அரச துறைக்குரியதாக உள்ளது. நடுத்தரகால மற்றும் நீண்டகால மொத்தப் படுகடன்களில் 91 சதவீதமானவை அரச துறை கடன்களாக உள்ளதோடு, எஞ்சிய 9 சதவீதமும் தனியார் துறை, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடன்களை உள்ளடக்கியுள்ளது. கடன் தவணைத் தொகைகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்கிய மொத்த வெளிநாட்டு கடன் பணிக் கொடுப்பனவுகள், 2007 ஆம் ஆண்டில் ஐ.அ. டொலர் பெறுமதியின்படி 14.1 சதவீதத்தால் அதிகரித்த போதிலும், வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதியினதும் பணிகளினதும் சதவீதமாக 13 சதவீத மட்டத்தில் இருந்தது.

செலாவணி வீத அமைப்பும் செலாவணி வீத அசைவுகளும்

ஒக்றோபர் மாதத்தில் ரூபா ஐ.அ. டொலருக்கு எதிராக 5 சதவீத அளவிலான அதிக வேகத்தில் தேய்வடைந்து வந்ததோடு, அம்மாதத்தில் நடைபெற்ற பன்னாட்டு இறைமை முறிகள் வழங்கலின் நிதிப் பாய்ச்சல் பெறுகைகளின் காரணமாக தேய்வடைவதன் போக்கை மீளத் திருப்புவதற்கு முடியுமாயிருந்தது. தீர்க்கப்படாது எஞ்சியுள்ள திறைசேரி முறிகளில், வெளிநாட்டு உடைமை எல்லை 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதம் வரை 2007 திசெம்பரில் அதிகரிக்கப்பட்டமை மற்றும் பிரதானமான நாணய வகைகளுக்கு எதிராக ஐ.அ. டொலர் நலிவடைந்ததன் காரணமாக ரூபாவின் உயர்வடையும் இயல்பு தொடர்ந்தும் வலுவடைந்தது. இதன் பெறுபேறாக, 2006 ஆம் ஆண்டில் 5.2 சதவீதத்தால் தேய்வடைந்த ரூபாய் 2007 ஆம் ஆண்டின் இறுதியில் ஐ.அ. டொலருக்கு எதிராக 0.93 சதவீதத்தில் குறைந்தளவு தேய்வடைந்தது. இலங்கை ரூபா, பிரித்தானிய பவுணுக்கு (2.7 சதவீதம்) மற்றும் யப்பான் யென்னுக்கு (5.6 சதவீதம்) எதிராக குறைந்த விகிதத்தில் தேய்வடைந்ததோடு, இந்திய ரூபாவுக்கு (11.9 சதவீதம்) மற்றும் யூரோவுக்கு (10.9 சதவீதம்) எதிராக உயர் விகிதத்தில் தேய்வடைந்தது.

பெயரளவு மற்றும் உண்மை விளைவுச் செலாவணி வீதம்

2007 ஆம் ஆண்டில் பெயரளவு விளைவுச் செலாவணி வீதம் 2006 ஆம் ஆண்டை விட குறைந்த விகிதாசாரத்தில் தேய்வடைந்ததோடு, உண்மை விளைவுச் செலாவணி வீதம் தொடர்ந்தும் உயர்வடைந்தது. பிரதானமான நாணயங்களுக்கு எதிராக இலங்கை ரூபாவின் நடுத்தர பெயரளவிலான தேய்வடைதலை காட்டுகின்ற வகையில், 5 நாணய வகைகள் மற்றும் 24 நாணய வகைகளிலான கூடையின் அடிப்படையிலான பெயரளவு விளைவுச் செலாவணி வீதம், 2006 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2007 ஆம் ஆண்டில் குறைந்த விகிதாசாரத்தில் தேய்வடைந்தது.

உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அபிவிருத்திகள்

2007 ஆம் ஆண்டினுள் சர்வதேச வர்த்தகம், வெளிநாட்டுத் தொழில் புரிவோர்களின் பண அனுப்பல்கள், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் திறைசேரி முறிகளிலான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் உயரளவில் வளர்ச்சியடைந்த போதிலும், வங்கிளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைச் செயற்பாடுகள் வீழ்ச்சியடைந்தன.

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அதிகளவிலான தளம்பலைத் தணிக்கும் பொருட்டும் அலுவல்சார் ஒதுக்குகளை அதிகரிக்கச் செய்வதற்கும் 2007 ஆம் ஆண்டு பூராவும் இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைத் தொழிற்பாடுகளில் தலையீடு செய்தது. 2007 ஆம் ஆண்டினுள் இலங்கை மத்திய வங்கி ஐ.அ. டொலர் 593 மில்லியனை வங்கிகளுக்கிடையிலான சந்தையிலிருந்து உள்ளீர்த்ததன் மூலமும், ஐ.அ. டொலர் 716 மில்லியன் வெளிநாட்டுச் செலாவணியை நிரம்பல் செய்ததன் மூலமும் உள்நாட்டின் வெளிநாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளில் தலையீடு செய்தது. இதன் பெறுபேறாக, 2006 ஆம் ஆண்டின் ஐ.அ. டொலர் 484 மில்லியன் தேறிய நிரம்பலுடன் ஒப்பிடுகையில் 2007 ஆம் ஆண்டில் தேறிய நிரம்பல் ஐ.அ. டொலர் 123 மில்லியனாக மட்டுமே இருந்தது.

ரூபாவை அடிப்படையாகக் கொண்ட மரபு ரீதியிலான உடன் மற்றும் முன்னோக்கிய செலாவணிச் சந்தையில் நடைபெறுகின்ற வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவு மற்றும் விற்பனைகளுக்கு மேலதிகமாக, 2007 ஆம் ஆண்டினுள் பெறுமதிச் சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் நடைபெற்ற வெளிநாட்டுச் சந்தைத் தொழிற்பாடுகளில் அதிகளவு வளர்ச்சியைக் காட்டியது. 2007 ஆம் ஆண்டில் எதிர்கால விலைப் பாதுகாப்பு முறையின் ஊடாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூபா 209 மில்லியனை சேமித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசின் இறைக் கொள்கையும் அரச நிதியியல் தொழிற்பாடுகளும்

மல்காந்தி பண்டார
பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

2007 ஆம் ஆண்டிலும் அரச நிதியியல் கொள்கையின் கவனம் வறிய மக்களுக்குச் சாதகமான பொருளாதார அபிவிருத்தியை அடைந்துகொள்கின்ற அதேநேரம் அரச நிதியியல் ஒருமைப்பாட்டுச் செயற்பாட்டினை பலப்படுத்துதல் தொடர்பில் செலுத்தப்பட்டது. 2007 வரவு செலவுத் திட்டத்தினுள் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கினை அடையும் பொருட்டு அரசிறையை அதிகரிக்கச் செய்தல் மற்றும் நடைமுறைச் செலவுகளை தர்க்க ரீதியாக்குதல் ஊடாக நடைமுறைக் கணக்கில் மிகையொன்றினை உருவாக்கிக் கொள்வதற்கும் அதேபோன்று அரச முதலீடுகளை அதிகரிக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டும் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆயினும், அரச நிதியியல் இலக்குகளை ஈட்டிக் கொள்ளுதல் பல சவால்களுக்கு மத்தியில் நிறைவேற்றப்பட வேண்டியதொரு விடயமாக இருந்தது. பயங்கரவாதச் செயல்கள் அதிகரித்தமையின் காரணமாக தேசிய பாதுகாப்பினைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு நேரிட்டது. உயர் மட்டத்திலிருந்த பணவீக்கம் மற்றும் பணவீக்க ரீதியிலான எதிர்பார்ப்புகளின் காரணமாக பண்டங்கள் மற்றும் பணிகளின் விலைகள் அதிகரிப்பதன் ஊடாக உருவாகிய அழுத்தத்தைக் குறைப்பதற்கு மேலதிக அரச நிதியியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசுக்கு நேரிட்டது. உயர்ந்தளவிலான மற்றும் மாற்றமுறும் உள்நாட்டுச் சந்தை வட்டி வீதத்தின் காரணமாக கடன் முகாமைத்துவத்தின் போது மிகவும் கவனமானதொரு கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு அரசிற்கு நேரிட்டது. பன்னாட்டுச் சந்தையில் பெற்றோலிய விலைகள் அசாதாரணமான விதத்தில் உயர் மட்டத்தில் நிலவியமையின் காரணமாக அரச வரவு செலவுத் திட்டத்தில் கடும் அழுத்தத்தை உருவாக்குகின்ற செலவுகள் திரட்சியடைவதைத் தடுக்கும் பொருட்டு விலைகளைத் திருத்துதல் தொடர்பில் தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கு அரசிற்கு நேரிட்டது.

2007 ஆம் ஆண்டில் அரச நிதியியல் ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தும் நோக்கத்துடன் வருமானம், நடைமுறைச் செலவுகள், அரச முதலீடுகள் மற்றும் கடன் முகாமைத்துவம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் பல்வேறு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அரசிறையை அதிகரிக்கச் செய்தல், நடுத்தர கால அரச நிதியியல் உபாய வழிமுறையில் முன்னுரிமை வழங்கப்படும் ஒரு துறையாததால், அரசிறை அதிகரிக்கின்ற போக்கினைத் தொடர்ந்து பேணிவருவதற்கான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இதன்படி, வரித் தளத்தினை விரிவாக்குகின்ற வழிமுறைகள் அறிமுகப்படுத் தப்பட்டு, தெரிவு செய்யப்பட்ட துறைகளை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அத்துறைகளுக்கு வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன. அதேபோன்று, வரி நிர்வாகத்தைப் பலப்படுத்துகின்றபோது, குறிப்பாக மனித வளத் துறையில் நிறுவன அபிவிருத்தி மற்றும் இயலுமை வளர்ச்சி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. வருமானம் திரட்டுகின்ற நிறுவனங்களான உண்ணாட்டரசிறைத் திணைக்களம், இலங்கைச் சுங்கம், மது வரித் திணைக்களம் ஆகிய நிறுவனங்களில் இயலுமை வளர்ச்சி மற்றும் நிறுவன அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு உதவும் பொருட்டு அரச நிதியியல் முகாமைத்துவ மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

நடைமுறைச் செலவுகளைத் தர்க்க ரீதியாக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளிடையே அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற வீடமைப்புக் கடன்களுக்கான வட்டி வீதங்களைத் திருத்துதல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதி முகாமைத்துவத்தை மேம்படுத்தும் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியன பிரதானமானவையாக உள்ளன. அரச முதலீடுகளை அதிகரிக்கச் செய்யும் பொருட்டு பாரிய அளவிலான பல கிராமிய உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டதோடு புதிதாக விடுவிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்கின்ற நடவடிக்கைகள் விரிவாக்கப்பட்டன.

அரச கடன் முகாமைத்துவத்திற்கான புதிய பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியிடல் துறைகளுக்கிடையே சிறந்ததொரு கலப்பினைப் பேணிவருவதன் ஊடாக, உள்நாட்டுக் கடன் பெறும் நிகழ்ச்சித் திட்டத்தினுள் வட்டிச் செலவைக் குறைத்துக்கொள்வதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு உள்நாட்டுத் திறைசேரி முறிகளில் முதலீடு செய்வதற்கிருந்த தடைகள் நீக்கப்பட்டு, திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீடுகளுக்காக வழங்கப்படும் உச்ச எல்லை, தீர்க்கப்படாத திறைசேரி முறிகளில் 5 தொடக்கம் 10 சதவீதம் வரை உயர்த்தப்பட்டது. அதேபோன்று வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறைக்கு நிதியிடுகின்ற வழிவகைகளை மேலும் பல்வகைப்படுத்தி அரசாங்கத்தினால், ஐ.அ. டொலர் 500 மில்லியன் (ரூபா 56 பில்லியன்) பெறுமதியான முதலாவது பன்னாட்டு இறைமை முறிகளை வழங்குதல் 2007 ஒக்ரோபர் மாதத்தில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது.

அரச வரவுசெலவுத் திட்டத் தொழிற்பாடுகள்

அரசிறை

2007 ஆம் ஆண்டில் அரசிறை ரூபா 565 பில்லியன் வரை 18.3 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வாறு மொத்த வருமான அதிகரிப்பில் வரி வருமானம் மற்றும் வரியல்லா வருமானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய இரண்டு துறைகளும் பங்களிப்புச் செய்தன. வரி நிருவாகத்தை மேலும் பலப்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முயற்சிகள், வரி ஊக்குவிப்புகள் மற்றும் வரி விடுவிப்புகள் உரிய விதத்தில் தயாரிக்கப்படுதல், வரி ஏற்புடைமையை மேம்படுத்துதல் மற்றும் அமுலாக்குதலைப் பலப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் மேற்கொண்ட வழிமுறைகள் இவ்வாறு அரசிறை அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்தன. எவ்வாறாயினும், 2007 ஆம் ஆண்டின் மொத்த அரசிறை ஆரம்ப மதிப்பீடுகளை விட ரூபா 35 பில்லியனால் குறைவடைந்தது. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் பொருட்டு தீர்வை வரிச் சலுகைகள் வழங்கப்பட்டமை மற்றும் வாகனங்களின் பொருட்டு பேணிவரப்பட்ட உயர் விளைவு வரி வீதத்தின் காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கையும் பெறுமதியும் குறைவடைந்தமை இறக்குமதி வருமானம் வீழ்ச்சியடைவதற்குரிய பிரதானமான காரணமாக இருந்தது. அரசிறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வீதமாக 2006 ஆம் ஆண்டில் நிலவிய 16.3 சதவீதத்திலிருந்து 15.8 சதவீதம் வரை குறைவடைந்தது. ஆண்டினுள் முழுமொத்த வரி வருமானம் 18.8 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 509 பில்லியனாக இருந்ததோடு, மொ.உ.உ. யின் வீதமாக இது 2006 ஆம் ஆண்டில் நிலவிய 14.6 சதவீதத்திலிருந்து 14.2 சதவீதம் வரை சிறிதளவு குறைவடைந்தது. வரியல்லா வருமானம் ரூபா 56 பில்லியன் வரை 13.4 சதவீதத்தால் அதிகரித்ததோடு, மொ.உ.உ. யின் வீதமாக 1.6 சதவீதம் வரை சிறிதளவு குறைவடைந்தது.

செலவுகளும் தேறிய கொடுகடனும்

2007 ஆம் ஆண்டில் அரச மொத்த செலவுகளும் தேறிய கொடுகடனும் ரூபா 842 பில்லியன் வரை 18 சதவீதத்தால் அதிகரித்த போதிலும், இது வரவு செலவுத் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட ரூபா 898 பில்லியனோடு ஒப்பிடுகையில் குறைவாயிருந்தது. மொ.உ.உ.யின் வீதமாக இது 2006 இல் இருந்த 24.3 சதவீதத்திலிருந்து 23.5 சதவீதம் வரை குறைவடைந்தது. எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தை விட மூலதனச் செலவுகள் குறைவடைந்தமை, இவ்வாறு அரச செலவுகள் மற்றும் தேறிய கொடுகடன்கள் குறைவடைவதற்குக் காரணமாயமைந்தன. 2007 ஆம் ஆண்டில் நடைமுறைச் செலவு மொ.உ.உ.யின் வீதமாக முந்திய ஆண்டிலிருந்த 18.6 சதவீதத்திலிருந்து 17.4 சதவீதம் வரை குறிப்பிடத்தக்களவு குறைவடைந்தது. எவ்வாறாயினும், பெயரளவிலான நடைமுறைச் செலவு, வரவு செலவுத் திட்டத்தில் இலக்கிடப்பட்டதை விட ரூபா 26 பில்லியனால் அதிகரித்தது. நடைமுறைச் செலவின் மேற்படி பெயரளவிலான அதிகரிப்புக்கு முக்கியமாக, சம்பளங்கள் மற்றும் படிகள், ஓய்வூதியக் கொடுப்பனவுகள், வட்டிக் கொடுப்பனவுகள், பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய செலவுகள் அதிகரித்தமை காரணமாயிருந்தன. ஆண்டினுள் அரச முதலீடுகள் தொடர்ச்சியாக அதிகரித்ததோடு, பெயரளவில் இது ரூபா 292 பில்லியன் வரை 29.2 சதவீதத்தால் அதிகரித்தது. மொ.உ.உ.யின் வீதமாக 2006 இல் 6 சதவீதமாயிருந்த அரச முதலீடுகள் 2007 இல் 6.4 சதவீதம் வரை அதிகரித்தது. இவ்வாறு அரச முதலீடுகள் அதிகரிப்பதற்கு பிரதானமாக, உள்நாட்டு நிதியங்கள் மற்றும் வெளிநாட்டு உதவிகளைப் பயன்படுத்தி அரசு அபிவிருத்திக் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு மேற்கொண்ட உற்சாகமான செயற்பாடுகள் காரணமாயமைந்தன.

வரைபடம் -1

அரசிறையின் உள்ளடக்கம் - 2007



முக்கியமான அரச நிதியியல் மீதிகள்

2007 ஆம் ஆண்டில் முழுமொத்த வரவு செலவுப் பற்றாக்குறை, கடந்த ஆண்டு அறிக்கையிடப்பட்ட மொ.உ.உ.யின் 8 சதவீதத்திலிருந்து 7.7 சதவீதம் (ரூபா 277 பில்லியன்) வரை குறைவடைந்தது. அரசிறை குறைவடைந்தமை மற்றும் நடைமுறைச் செலவுகள் அதிகரித்தமை, மூலதனச் செலவுகள் மற்றும் தேறிய கொடுகடன்களில் உருவாகிய குறைவின் மூலம் வெளிப்படுத்தப்பட்டமையினால் முழுமொத்த வரவு செலவுப் பற்றாக்குறை, வரவு செலவுத் திட்ட மதிப்பீடான மொ.உ.உ.யின் 8.4 சதவீதத்தை விடவும் குறைவாக இருந்தது. நடைமுறைச் செலவுகளுக்கு ஒப்பீட்டளவில் வருமானம் உயர் வளர்ச்சியைக் காட்டியமையினால் அரச சேமிப்பின்மையைப் பிரதிபலிக்கின்ற நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது, 2006 ஆம் ஆண்டின் மொ.உ.உ. யின் 2.4 சதவீதத்திலிருந்து 1.6 சதவீதம் வரை குறைவடைந்தது. இதற்கிடையே, நடப்பு ஆண்டின் அரச நிதியியல் செயற்பாடுகளின் ஊடாக பேரண்டப் பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற தாக்கத்தைப் பிரதிபலிக்கின்ற முதனிலைப் பற்றாக்குறையானது (வட்டிச் செலவுகள் மற்றும் முழுமொத்த வரவு செலவுப் பற்றாக்குறை) மொ.உ.உ.யின் வீதமாக 2006 இன் 2.9 சதவீதத்திலிருந்து 2.6 சதவீதம் வரை குறைவடைந்தது.

வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியிடல்

2007 ஆம் ஆண்டில் ரூபா 277 பில்லியனாயிருந்த முழுமொத்த வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியிடும் பொருட்டு உள்நாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட வளங்கள் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்பட்ட வளங்களை விடக் குறைவாக இருந்தன. தேறிய உள்நாட்டு நிதியிடல் 2006 இல் அறிக்கையிடப்பட்ட ரூபா 164 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 128 பில்லியன் வரை குறைவடைந்தது. வரவு செலவுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றாக்குறையில் உள்நாட்டு மூலங்களிலிருந்து நிதியிடப்பட்ட தொகை 2006 இன் 69 சதவீதத்திலிருந்து 2007 இல் 46 சதவீதம் வரை குறைவடைந்தது. மொத்தத் தேறிய உள்நாட்டு நிதியிடல் தொகையில் 88 சதவீதம் வங்கியல்லா துறைகளிலிருந்து பெறப்பட்டது. ஆதலால், வங்கி முறையிலிருந்து பெறப்பட்ட தொகை 2007 ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்களவில் குறைவடைந்தது. தேறிய வெளிநாட்டு நிதியிடல் 2007 இற்கான ஆரம்ப மதிப்பீடான ரூபா 142 பில்லியனுடன் ஒப்பிடுகையில், ரூபா 131 பில்லியனாக இருந்தது. மொத்த தேறிய வெளிநாட்டு நிதியிடல் தொகை, பன்னாட்டு இறைமை முறி வழங்கலின் மூலம் பெறப்பட்ட ரூபா 56 பில்லியன், ரூபா பெறுமதியில் வெளியிடப்பட்ட திறைசேரி முறிகளுக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 37 பில்லியன், ஏனைய வெளிநாட்டுக் கடன்களின் மூலம் பெறப்பட்ட ரூபா 8 பில்லியன் மற்றும் ரூபா 30 பில்லியன்களான வெளிநாட்டுக் கொடைகள் ஆகியனவற்றை உள்ளடக்கியிருந்தன.

மாகாண சபைகளின் வரவு செலவுத் திட்டத் தொழிற்பாடுகள்

2007 ஆம் ஆண்டில் மாகாண சபைகளின் முழுமொத்த வரவு செலவுத் தொழிற்பாடுகள் வளர்ச்சியடைந்தன. பிரதானமாக மொத்த விற்பனைப் புரள்வு வரி மற்றும் முத்திரை வரியின் மூலமான வருமானம் அதிகரித்தமையினால், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் மாகாண சபைகளின் வருமானம் 33 சதவீதம் அதிகரித்தது. மேல் மாகாண சபை வருமானம் திரட்டுகின்ற பிரதானமான மாகாண சபையாக 2007 ஆம் ஆண்டிலும் செயலாற்றியது. 2006 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மாகாண சபைகளின் நடைமுறைச் செலவுகள் 21 சதவீதத்தால் அதிகரித்தது. மாகாண சபைகளின் முதலீட்டுச் செலவுகளும் அதிகரித்ததோடு, இது பிரதானமாக மாகாண விசேட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு நிதியங்களின் மூலம் நடைபெறுகின்ற விசேட கருத்திட்டங்களுக்கானதாக இருந்தது.

அரச துறையின் படுகடன் மற்றும் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

2007 இல் படுகடன் தாக்குப் பிடிக்கும் ஆற்றலின் தொடர்ச்சியான வளர்ச்சியைக் காட்டுகின்ற விதத்தில் மொ.உ.உ. யின் வீதமாக தீர்க்கப்படாத அரச படுகடன் தொகை தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. பெயரளவிலான அரச படுகடன் தொகை ரூபா 3,070 பில்லியன் வரை 18 சதவீதத்தால் அதிகரித்த போதிலும், மொ.உ.உ.யின் வீதமாக இது 2006 இல் இருந்த 88.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2007 இல் 85.8 சதவீதம் வரை தொடர்ச்சியாகக் குறைவடைந்தது. மேற்படி குறைவடைதலானது, முக்கியமாக ஆண்டின் இறுதியில் பிரதானமான வெளிநாட்டு நாணய வகைகளுக்கு ஒப்பீட்டளவில் ரூபாவின் பெறுமதி உறுதியானதாக இருந்தமை மற்றும் படுகடன் தொகையின் பெயரளவிலான வளர்ச்சியை விட மொ.உ.உ.யின் பெயரளவிலான வளர்ச்சி அதிகரித்தமையின் காரணமாக உருவாகியதாகும். 2007 இல் மொ.உ.உ.யின் வீதமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் படுகடன் முறையே 47.9 சதவீதமாகவும் 37.9 சதவீதமாகவும் இருந்தது. 2007 இல் அரச தீர்க்கப்படாத முழுமொத்தப் படுகடன் ரூபா 462 பில்லியனால் அதிகரித்ததோடு, வெளிநாட்டுப் படுகடன் தொகையின் அதிகரிப்பு ரூபா 226 பில்லியனாக இருந்தது. மொத்த உள்நாட்டுப் படுகடன் தொகையில் உள்ள நடுத்தர மற்றும் நீண்ட கால படுகடன் தொகை 78.8 சதவீதமாயிருந்ததோடு, திறைசேரி முறிகள் தொடர்ந்தும் பிரதானமான உள்நாட்டுக் கடன் கருவியாக விளங்கியது. ஆண்டினுள் வங்கித் துறையின் பொறுப்புகள் சிறிதளவு அதிகரித்தன. வர்த்தக ரீதியிலான வெளிநாட்டுக் கடன் பெறுதல்கள் அதிகரித்தமையின் காரணமாக அரச முழுமொத்த வெளிநாட்டு படுகடன்களிலிருந்த சலுகை அடிப்படையிலான படுகடன் தொகை 2006 இல் நிலவிய 93 சதவீதத்திலிருந்து 2007 இல் 83.3 சதவீதம் வரை குறைவடைந்தது.

நிதியியலல்லாத அரச கூட்டுத்தாபனங்களின் படுகடன்கள்

நிதியியலல்லாத அரச கூட்டுத்தாபனங்களின் வங்கித்துறைக்கிருந்த தீர்க்கப்படாத கடன் தொகை மற்றும் கடன் திட்டங்களின் (Credit Lines) கீழ் பெறப்பட்டிருந்த பொறுப்புகள் உள்ளடங்கிய நிதியியலல்லாத அரச கூட்டுத்தாபனங்களின் படுகடன் தொகை முன்னைய ஆண்டிலிருந்த ரூபா 45 பில்லியனிலிருந்து 2007 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 60 பில்லியன் வரை அதிகரித்தது. வங்கி முறைக்கிருந்த அரச கூட்டுத்தாபனங்களின் பொறுப்புகள் ரூபா 49.2 பில்லியன் வரை ரூபா 17.6 பில்லியனால் அதிகரித்தது. இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வங்கித் துறைக்கிருந்த படுகடன் தொகை அரச கூட்டுத்தாபனங்களின் முழுமொத்தப் படுகடன் தொகையில் 93.6 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

அரச துறைப் படுகடன்கள்

அரச கூட்டுத்தாபனங்களின் வங்கித் துறைக்கான படுகடன் தொகை மற்றும் கடன் திட்டங்களின் மூலம் பெறப்பட்ட படுகடன்களில் தீர்க்கப்படாத மீதிகளை உள்ளடக்கிய அரச துறைப் படுகடன் தொகை 2007 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 3,130 பில்லியன் வரை ரூபா 477 பில்லியனால் அதிகரித்தது. எவ்வாறாயினும், மொ.உ.உ. யின் வீதமாக இது 2006 இன் 90.3 சதவீத்திலிருந்து 2007 இன் இறுதியில் 87.5 சதவீதம் வரை மேலும் குறைவடைந்தது.

படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

2007 ஆம் ஆண்டில் முழுமொத்த படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூபா 500.5 பில்லியன் வரை 12.6 சதவீதத்தால் அதிகரித்தது. படுகடன் மீள் கொடுப்பனவுகள் ரூபா 317.8 பில்லியனையும் (63.5 சதவீதம்) மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் ரூபா 182.7 பில்லியனையும் (36.5 சதவீதம்) இது உள்ளடக்கியுள்ளது. உள்நாட்டு மூலங்களுக்கு செய்யப்பட்ட படுகடன் பணிக் கொடுப்பனவுகள் ரூபா 415 பில்லியனாக இருந்ததோடு, வெளிநாட்டு மூலங்களுக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 85.4 பில்லியனாக இருந்தது. 2005 இல் தன்னார்வ அடிப்படையில் பெறப்பட்ட படுகடன் கொடுப்பனவுகளைத் தாமதிக்கின்ற வசதியின் (Debt Moratorium) கீழ் கொடுப்பனவுகள் தாமதிக்கப்பட்ட வட்டி மற்றும் படுகடன் தவணைத் தொகைகளின் கொடுப்பனவுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகப் பெறப்பட்ட கடன்களின் மீள் கொடுப்பனவுகள் இதில் உள்ளடங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை – 1

அரசின் இறைத்தொழிற்பாடுகளின் தொகுப்பு

தலைப்பு	2006	2007 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள்	2007 தற்காலிக மானவை	2008 ஒப்புதலளிக் கப்பட்ட மதிப்பீடுகள்
	ரூபா மில்லியன்			
மொத்த வருமானம்	477,833	599,817	565,051	750,741
வரி அரசிறை	540,929	508,947	677,259	
வரியல்லா அரசிறை	49,455	58,888	56,104	73,482
செலவினமும் மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும்	713,647	898,000	841,604	1,044,188
நடைமுறை	547,960	596,260	622,758	712,894
மூலதனமும் தேறிய கடன் வழங்கலும்	165,686	301,836	218,846	331,294
இதில் அரச முதலீடு	177,443	303,567	229,274	335,672
நடைமுறைக் கணக்கு மிகை (+)/ பற்றாக்குறை(-)	-70,126	3,652	-57,706	37,847
முதன்மைக் கணக்கு மிகை (+)/ பற்றாக்குறை(-)	-85,035	-129,061	-93,871	-83,622
முழுமொத்த வரவுசெலவு மிகை (+)/ பற்றாக்குறை(-)	-235,813	-298,183	-276,552	-293,447
நிதியிடல்	235,813	298,183	276,552	293,447
வெளிநாட்டு நிதியிடல்	72,010	141,971	131,415	293,447
வெளிநாட்டுக் கடன்கள் (அ)	41,939	117,896	100,907	138,645
வெளிநாட்டுக் கொடைகள்	30,068	24,075	30,508	109,895
உள்நாட்டு நிதியிடல்	156,212	127,737	154,802	28,750
சந்தைக் கடன்பாடுகள்	163,805	156,212	127,077	154,802
வங்கியல்லா	83,797	139,512	111,308	145,802
வங்கி	80,008	16,700	15,769	9,000
நாணய மேலாண்மை	38,579	-	-13,098	-
வர்த்தக வங்கிகள்	41,429	-	28,867	-
ஏனைய கடன்பாடுகள்	-	-	660	-
செலுத்த வேண்டிய செலவுகள்	-	-	17,400	-
	மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக			
மொத்த வருமானம்	16.3	16.9	15.8	18.0
வரி அரசிறை	15.2	14.2	16.2	
வரியல்லா அரசிறை	1.7	1.7	1.6	1.8
செலவினமும் மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும்	24.3	25.3	23.5	25.0
நடைமுறை	18.6	16.8	17.4	17.1
மூலதனமும் தேறிய கடன் வழங்கலும்	5.6	8.5	6.1	7.9
இதில் அரச முதலீடு	6.0	8.6	6.4	8.0
நடைமுறைக் கணக்கு மிகை (+)/பற்றாக்குறை(-)	-2.4	0.1	-1.6	0.9
முதன்மைக் கணக்கு மிகை (+)/பற்றாக்குறை(-)	-2.9	-3.6	-2.6	-2.0
முழுமொத்த வரவுசெலவு மிகை (+)/பற்றாக்குறை(-)	-8.0	-8.4	-7.7	-7.0
நிதியிடல்	8.0	8.4	7.7	7.0
வெளிநாட்டு நிதியிடல்	2.5	4.0	3.7	3.3
வெளிநாட்டுக் கடன்கள் (அ)	1.4	3.3	2.8	2.6
வெளிநாட்டுக் கொடைகள்	1.0	0.7	0.9	0.7
உள்நாட்டு நிதியிடல்	4.4	3.6	3.7	
சந்தைக் கடன்பாடுகள்	5.6	4.4	3.6	3.7
வங்கியல்லா	2.9	3.9	3.1	3.5
வங்கி	2.7	0.5	0.4	0.2
நாணய மேலாண்மை	1.3	-	-0.4	-
வர்த்தக வங்கிகள்	1.4	-	0.8	-
ஏனைய கடன்பாடுகள்	-	-	.....	-
செலுத்த வேண்டிய செலவுகள்	-	-	0.5	-

மூலம்: நிதி, திட்டமிடல் அமைச்சு

(அ) வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 37,127 மில்லியன் திறைசேரி முறிகள் உள்ளடங்கியுள்ளன.

கொழும்பு – 13, 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தையிலமைந்துள்ள (ஆட்டுப்பட்டித்தெரு) கௌரி அச்சகத்தில் அச்சிடப்பட்டு இலங்கை மத்திய வங்கி தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org